Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 326
சனிக்கிழமை
ஐப்பசி 06 ஆம் நாள்
23 ஒக்ரோபர் 2021
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை : ரூ.30
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## தொற்று 552 சாவு 12

கொழும்பு, ஒக். 23
இலங்கையில் நேற்று 552 பேர் கொரோனா

15



# மக்கள் பிரச்சினைக்கு அரசிடம் தீர்வு இல்லை

## சபையில் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்ரோபர். 23
"ராஜபக்ச அரசின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் நாட்டு மக்களை நெருக்கடி நிலைக்குள் தள்ளியுள்ளதுடன் மீண்டும் 1970 - 1977 ஆண்டுகளின் வரிசை யுகத்தை உருவாக்கியுள்ளது. பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கத்திடம் தீர்வு ஏதுமில்லை. " என்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

15

### முச்சந்தி முரளி



" இப்பவும் அவைக்கு புலிப்பயம் எண்டாக் கடும் கிலிதான் போல. அதுதான் புலி புலி எண்டு கத்துகினம் பாருங்கோ"

## நவம்பர் தொடக்கம் மூன்றாவது தடுப்பூசி

கொழும்பு, ஒக். 23
தெரிவுசெய்யப்பட்ட குழுவினருக்கு மூன்றாம் கட்டத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மூன்றாம் கட்டத் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியை வழங்க தீர்மானித்துள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

15

## விவசாயிகளுக்கு நீதிகோரி நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஒக். 23
விவசாயிகள் எதிர்நோக்கும் தற்காலப் பிரச்சினைக்கு தீர்வுகோரி நாடாளுமன்றில் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நாடாளுமன்றம் கூடியதைத் தொடர்ந்து,

15

## துப்புரவுப் பணியின்போது வீழ்ந்து சாவு

யாழ்ப்பாணம், ஒக். 23
யாழ். பண்டத்தரிப்பு பிரான்பற்று பகுதியில் திடீரென நிலத்தில் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
காணி ஒன்றில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தபோது குறித்த நபர் திடீ

15

## ஒக். 31ஆம் திகதியுடன் மாகாணத்தடை நீக்கம்

கொழும்பு, ஒக். 23
மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் 31 ஆம் திகதி அதிகாலை 4

15

## கூட்டத்தில் 'புலி' கூட்டமைப்பு வெளியே!

கொழும்பு, ஒக். 23
வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் 'புலி' வந்ததால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்

15

## மடு காணி விடயத்தில் மூக்கு நுழைப்பது ஏன்?

ஞானசாரதேரரிடம் செல்வம் கேள்வி

கொழும்பு, ஒக். 23
"திருக்கேதீஸ்வரத்தில் காணியை ஆக்கிரமித்து பௌத்த கோவிலைக் கட்டிய ஞானசார தேரர் மடு தேவாலய காணிப்

15

## மாகாணங்களுக்கிடையே நவம்பரிலிருந்து ரயில் சேவை

கொழும்பு, ஒக். 23
மாகாணங்களுக்கு இடையிலான புகையிரத போக்குவரத்து சேவைகள் நவம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன என்று போக்

15

## கல்வித் திணைக்களம் பொய் கூறுகிறதா?

ஆசிரியர் சங்கம் கேள்வி

வவுனியா, ஒக். 23
ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டம் தொடர்பான புள்ளிவிவரங்கள் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்

15

## பருத்தித்துறை மீனவர்கள் இந்தியப் படையால் கைது

யாழ்ப்பாணம், ஒக். 23
பருத்தித்துறை மீனவர்கள் இருவர், இந்தியக் கடற்படையினரால் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டனர். அத்துமீறி இந்திய எல்லைக்குள் நுழைந்து

10

## குற்றச்செயல்களை கட்டுப்படுத்துங்கள்!

கிளிநொச்சியில் போராட்டம்



கிளிநொச்சி, ஒக். 23
கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற குற்றச்செயல்கள், சட்டவிரோதச் செயற்பாடுகளை

15

## தேர்தல்கால வாக்குறுதியை சுமந்திரன் நிறைவேற்றட்டும்

குருநகர் கடற்றொழில் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 23
நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தேர்தல் காலத்தில் எமக்கு வாக்குறுதியளித்தபடி,

10

## விஞ்ஞான முறைப்படி வேண்டும் 'இழுவைமடி'

சிவாஜிலிங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 23
மீன்பிடித்துறை முறைகளில், அடி முறையை தடை செய்யுங்கள். இழுவை மடி மீன்பிடி

10

# தீபாவளி வியாபாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வியாபார நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ளன.

குறிப்பாக புடைவை விற்பனை நிலையங்களில் மக்கள் கூட்டத்தை அவதானிக்க முடிந்துள்ளது. மாகாணங்களுக்கிடையிலான தடை விதிக்கப்பட்டுள்ளபோதும், நடமாடும் வியாபாரிகள் பலர் வாகனங்களில் வருகை தந்து யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு வீதியோரங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கொரோனாத் தொற்றால் எதிர்வரும் நாள்களில் ஊரடங்கு அறிவிக்கப்படலாம் என்ற அச்சத்தில் அதிகளவான வர்த்தகர்கள் தற்போதே வியாபார நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.


வழமையாக பண்டிகைக் காலங்களில் முதல் 3 நாள்களுக்குள் அமோக விற்பனை இடம்பெறும். தற்போது 10 நாள்களுக்கு முன்னரே வியாபாரம் சூடு பிடித்துள்ளது.

யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் பெரும்பாலானோர் ஒன்லைன் முறையில் உடுபுடவைகளைக் கொள்வனவு செய்து விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். இந்த வருடப் பண்டிகைக் காலத்தில் பெருமளவான வர்த்தகர்கள் தென்பகுதியை நாடவில்லை.

கடந்த சித்திரைப் புதுவருடப் பண்டிகைக் காலத்தில் ஊரடங்கு நடைமுறையில் இருந்தமையாலும், கொரோனா அச்சத்தாலும் வியாபார நடவடிக்கைகள் சூடுபிடிக்கவில்லை.

எனினும் தற்போது தீபாவளி பண்டிகையை இலக்கு வைத்து, வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். பெருமளவான கடைகளில் மலிவு விற்பனை என்ற பதாகைகளையும் அவதானிக்க முடிந்துள்ளது. (ஒ-4)

## அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன தலைவரும் பதவி துறக்கிறார்?



கொழும்பு,ஒக்.23

சுகாதாரத்துறையைச் சேர்ந்த பலர் தங்களது பதவியை விட்டு விலகி வரும் நிலையில், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மருத்துவர் பிரசன்ன குணசேன, பதவி விலகலுக்கான கடிதத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அவரது பதவி விலகலை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் பதவியை விட்டு விலகுகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரபல நரம்பியல் மருத்துவரான மருத்துவர் பிரசன்ன, கொரோனா பெருந்தொற்று நிலைமைகளில் மிக முக்கியமான சேவையை வழங்கியவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் லலித் ஜயகொடியும் பதவியை விட்டு விலகத் தீர்மானித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4)

## கரும்புத் தோட்ட காணியில் அடாத்தாக பயிர்ச்செய்கை

கிளிநொச்சி,ஒக்.23

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணியில் அடாத்தாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட நபர்கள் தொடர்பில் கரைச்சி பிரதேச செயலர் மற்றும் அக்கராயன் பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கரும்புத் தோட்டக் காணியில் அண்மையில் பொதுமக்களின் பயிர்ச் செய்கைக்காக 196 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் சில நபர்கள் குறித்த காணியில் அடாத்தாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பொதுமக்களால் குற்றம் சாட்டப்பட்டு இது தொடர்பில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ஐ-13)

## ஜும்ஆத் தொழுகைக்கான அறிவுறுத்தல்கள் வெளியீடு

அனைத்து பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு ஜும்ஆத் தொழுகைக்கான மாத்திரம் வரையறுக்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்று, இலங்கை வக்பு சபையின் பணிப்புரைக்கமைய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ஐ.அன்ஸாரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

பள்ளிவாசல்களில் கூட்டு செயற்பாடான ஜும்ஆத் தொழுகையை மட்டும் நடத்துவதற்கு கட்டாய நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இலங்கை வக்பு சபையானது அனுமதியை வழங்கியுள்ளது.

இந்த அனுமதியானது ஜும்ஆத் தொழுகைக்காக மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு பள்ளிவாசலிலும் இதற்காக எல்லா நேரத்திலும் கலந்து கொள்ளக்கூடிய அதிகபட்ச நபர்களின் எண்ணிக்கை 50 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. தொழுகையின் ஒரேயொரு அமர்வு மாத்திரமே அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு வரிசை இடைவெளி விட்டு தொழுகைகள் நடத்தப்பட வேண்டும். முகக்கவசம் அணிதல், ஒரு மீற்றர் இடைவெளி பேணல், சொந்தமான தொழுகை விரிப்பை எடுத்து வருதல் மற்றும் வீட்டிலிருந்து வுழு செய்துகொண்டு வருதல் என்பன கட்டாயமானதாகும்.

சுகாதார அல்லது பாதுகாப்பு தரப்பினரின் ஏனைய அனைத்து விதிமுறைகள், வழிகாட்டல்கள் மற்றும் வக்பு சபையின் முன்னைய வழிகாட்டுதல்கள் மிகவும் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படல் வேண்டும். அதேவேளை வேறு எந்த கூட்டு வணக்க வழிபாடுகள் அல்லது செயற்பாடுகளுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்று அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## உணவு விஞ்ஞான தொழினுட்பத்தில் முதுவிஞ்ஞான மாணிகற்கை

யாழ்ப்பாணம், ஒக். 23

உணவு விஞ்ஞான தொழினுட்பத்தில் முது விஞ்ஞானமாணி கற்கைக்கான விண்ணப்பங்களை ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடம் கோரியுள்ளது.

மருத்துவமாணி, சத்திரசிகிச்சை மாணி, ஆயுள்வேத சத்திர சிகிச்சைமாணி, விலங்கு விஞ்ஞானமாணி பட்டம், இரசாயனவியல் விஞ்ஞானமாணி பட்டம், விவசாய தொழினுட்பம், இரசாயன பொறியியல் ஆகியவற்றில் விஞ்ஞானமாணிப் பட்டம், இணைந்த சுகாதார சேவை அல்லது தாதியியல் கற்கைநெறி ஆகியவற்றைப் பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக இணையவழியில் இந்தக் கற்கைக்கு விண்ணப்பிக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## யொஹானி பிரபலமாவதற்கு றோவின் சூழ்ச்சி காரணமாம்

### கண்டுபிடித்தார் நளின் டி சில்வா

கொழும்பு, ஒக்.23

இலங்கையில் தற்போதைய அரசையும், சிங்கள மக்களையும் வென்றெடுப்பதற்காக இந்தியா மிகுந்த அக்கறையுடன் செயற்படுகின்றது என்று பேராசிரியர் நளின் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இளம் சிங்கள பாடகி யொஹானி டி சில்வாவின் "மெனிக்கே மகே ஹிதே" என்ற பாடல் உலகம் முழுவதும் பிரபலமானதற்கு இந்தியாவின் "றோ" உளவுப் பிரிவின் சூழ்ச்சியும் காரணமாக இருக்கலாம். இலங்கை மக்களுக்குள் இந்தியா மீதுள்ள அதிருப்தியை போக்குவதற்காக இந்தியா, யொஹானி டி சில்வாவை தெரிவு செய்துள்ளது. இந்தியா மீது இலங்கை மக்கள் அதிருப்தியுடன் இருப்பது இன்று நேற்றல்ல. மன்னன் விஜயன், குவேனி காலத்தில் இருந்தே இலங்கை மக்கள் இந்தியா மீது அதிருப்திக் கொண்டுள்ளனர். அந்த அதிருப்தியை போக்க இந்தியா ஒரு பாடகியைத் தெரிவு செய்துள்ளது. அந்தப் பாடகி, முக்கியமான பிரமுகர் ஒருவரின் மகள் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயம். இலங்கையில் இதுவரை பிரபலமாகாத அந்த பாடலுக்கு திட்டமிட்ட அடிப்படையில் பரப்புரை பெற்றுக் கொடுத்துள்ளனர். அமிதாப்பச்சன் மாத்திரமல்ல, சல்மான் கான் போன்றோரும் இதற்கு உதவி வருகின்றனர். இந்திய திரைக்கலைஞர்கள் தன்னிச்சையாக உதவவில்லை. சிலர் அவர்களை வழிநடத்துகின்றனர். இந்தியா என்பது இலங்கையை விட மிகவும் திட்டமிட்டு வேலை செய்யக் கூடிய நாடு. அந்த நாட்டின் நிர்வாக அதிகாரிகள், உளவுப் பிரிவுகள் என்பன வேலை செய்கின்றன - என்றார். (எ-இ)

## கோட்டைப்பட்டின மீனவர்கள் தொடர்ச்சியாகப் போராட்டம்

கொழும்பு,ஒக்.23

இலங்கைக் கடற்படையினருக்கு எதிராக, இந்தியா புதுக்கோட்டை கோட்டைப்பட்டினம் மீனவர்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கோட்டைப்பட்டினம் விசைப்படகு மீன்பிடி இறங்குதளத்தில் இருந்து 118 விசைப்படகுகளில் மீனவர்கள் கடந்த 18 ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். அதில், எஸ்.சவுந்தரராஜன் என்பவருக்குச் சொந்தமான படகில் சென்ற மூவர், சுமார் 17 நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர், எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாகக் கூறி, தங்களது றோந்து கப்பல் மூலம் மீனவர்களின் படகை இடித்துள்ளனர். அதில் படகு மூழ்கி நடுக்கடலில் மூழ்கியது. இதையடுத்து இருவரை இலங்கைக் கடற்படையினர் மீட்டனர். இரண்டு நாள்களின் பின்னர் தேடலுக்குப் பின்னர் ராஜ்கிரண் என்பவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய செயலைக் கண்டித்தும், மீனவர் ராஜ்கிரணின் சடலம் மற்றும் சிறை பிடிக்கப்பட்டுள்ள 2 மீனவர்களையும் உடனே ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் கோட்டைப்பட்டினத்தில் 3 ஆவது நாளாக மீனவர்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்தில் ராஜ்கிரணின் மனைவி, தாய் உட்பட 300க்கும் மேற்பட்டோர் பங்குபற்றியுள்ளனர். (ஒ.4)

# அடுத்த ஆண்டு வரை கொரோனா நீடிக்கும்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

**கொழும்பு,ஒக்.23**

**2022 ஆம் ஆண்டு வரை கொரோனாத் தொற்று நிலைமை நீடிக்கும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிரேஷ்ட தலைவர், மருத்துவர் புரூஸ் அய்ல்வர்ட் தெரிவிக்கையில்,

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், ஆபிரிக்க மக்கள் தொகையில் 5 வீதத்துக்கும் குறைவானவர்களே இதுவரை கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

தடுப்பூசி தேவைப்படும் நாடுகளுக்கு 10 மில்லியனுக்கும் அதிக கொரோனாத் தடுப்பூசிகளை பிரிட்டன் வழங்கியுள்ளது.

பெரும்பாலான வறியநாடுகளுக்கு இதுவரை கொரோனாத் தடுப்பூசிகள் கிடைக்கவில்லை. இதன் காரணமாக 2022 ஆம் ஆண்டுவரை மிக இலகுவாக கொரோனா வைரஸ் தொற்று நீடிக்கக்கூடும்- என்றார். (ஒ-4)



## அதிகாரிகளின் மீது தாக்குதல் முல்லைத்தீவில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஒக்.23

முல்லைத்தீவு மாவட்டத்தில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


இந்தச் சம்பவம் கடந்த 13ஆம் திகதி முள்ளியவளை, முறிப்புப் பிரதேசத்தில் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் வணிக நிலையம் ஒன்றுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டபோது, ஒரு நாளைக்கு ஒரு விலை தீர்மானிக்கிறீர்கள் என்று, வணிக நிலையத்தில் இருந்தவர் முரண்பட்டுள்ளார் என்றும், அவர் தடியால் அதிகாரிகளைத் தாக்கினார் என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்று அவரை நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைத்தது.

நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சந்தேகநபரை 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. (எ-19)

## சீனாவில் மீண்டும் பரவும் கொரோனா



கொழும்பு,ஒக்.23

சீனாவின் வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் மீண்டும் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவி வருகிறது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐந்தாவது நாளாகவும் அங்கு அதிகமானோருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து பாடசாலைகள், சுற்றுலாத் தலங்கள் என அனைத்தும் அங்கு மூடப்பட்டுள்ளன. விமான நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

லான்சோ நகரில் இருந்து பிற மாகாணங்களுக்குச் செல்ல விரும்புபவர்கள் கட்டாயம் கொரோனாப் பரிசோதனை சான்றிதழைக் காண்பிக்க வேண்டும்என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் தொற்றுப் பரவலை தடுக்க லான்சோ நகரில் இருந்து மக்கள் தேவையில்லாமல் வெளியே வர வேண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையிலே ஜியான் மற்றும் லான்சோ இடையே 60 வீத விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்களிடம் கொரோனா பரிசோதனையை அதிகளவில் மேற்கொள்ளவும், சுற்றலாத் தலங்களை உடனடியாக மூடவும் மாகாண அரசுகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-4)



இலங்கையில் பணிகளில் ஈடுபட்டுள்ள சீனப் பணியாளர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொழும்புத் துறைமுகத்தில் தடுப்பூசி போடும் பணி நேற்றுத் தொடங்கியது. கொழும்பு ஜிந்துபிட்டி சுகாதார அலுவலகத்தின் அதிகாரிகளால் தடுப்பூசி ஏற்றப்படுகிறது. (எ-இ)




**உதவி செய்யிறதாச் சொல்லி உல்லாசமா இருக்கிறவை பற்றி இண்டைக்கு பாப்பம்.**

**கொஞ்சநாளைக்கு முதல் பேஸ்புக்கில் வன்னியூர் மூண்டெழுத்து பிள்ளையின்ர அந்தரங்க வீடியோ ஒண்டு பரவினதெல்லோ. அந்த வீடியோவுக்கு பின்னால உள்ள விசயங்களைத் தேடேக்கதான், பட்சிக்கு கன விசயங்கள் கிடைச்சிது. அந்தப் பிள்ளை ஒரு சராசரிக் குடும்பதைச் சேர்ந்தவா. ஒரு தொழில் கிடையாது. ஆனால் கை நிறையக் காசு. கார், நகை , நட்டு, விதவிதமான உடுப்பு எண்டு கடும் விலாசம். அதோட ஒரு கட்சியின்ர உறுப்பினராவும் இருக்கிறா. அந்தக் கட்சி சார்பில இவாவே சிலரிட்ட அனுசரணை எடுத்து உதவிப்பொருள் எல்லாம் குடுத்திருக்கிறா. இவ்வளவு செய்ய அவாவுக்கு காசு எங்க வானத்தில இருந்து கொட்டுதோ? எண்டு தேடினால், புதிசு புதிசா கனக்க விசயங்கள் வந்திச்சு.**

**அவா மட்டுமில்ல, அதை மாதிரி இன்னும் சிலரும் இப்படி காசுமழையில குளிக்கினம். அவை தங்களுக்கு காசு காய்க்கிற மரங்களை வைச்சிருக்கினமாம்**

**இவையள் எல்லாம் ஒரே ரூட்டில தான் போகினம். வெளிநாட்டில உள்ள ஆக்களை முதல்ல பேஸ்புக்கில பழக்கம் பிடிப்பினமாம். பிறகு இங்க உள்ள ஏலாத ஆக்களுக்கு உதவி செய்யிறதாச் சொல்லி, அவையிட்ட காசு கேப்பினம். அவையும் பொம்பிளைப் பிள்ளை கேக்கேக்க எப்பிடி இல்லையெண்டு சொல்லுவினம். நல்லாக் குடுப்பினம். அப்பிடி வாங்கின காசை முதல்ல உண்மையாவே சிலருக்கு குடுத்து அதை பேஸ்புக்கில போட்டு, தாங்கள் சமூக சேவகர் எண்டு படம் காட்டுவினம். அதால இன்னும் புதிசா ஆக்களும் இவைமூலம் உதவி செய்ய காசு அனுப்புவினம். இப்பிடி கிடைக்கிற வெளிநாட்டு உபகாரிகளோட இஞ்ச இருக்கிறவை கொஞ்சம் 'ஆழமா' கதைக்க வெளிக்கிடுவினம். இரவிரவா 'சமூக சேவை' பற்றி கதைச்சு நெருக்கமாகி, அது ஆளுக்காள் அந்தரங்க வீடியோ போடுற அளவுக்கு மனந்திறந்த கதையா மாறிடும்.**

**வெளிநாட்டில இருக்கிறவையும் காய்ஞ்ச மாடு கம்பில விழுந்த மாதிரி எதைப்பற்றியும் யோசிக்காமல் இப்பிடி வீடியோ கோல் பண்ணி, கொஞ்சம் இசகு பிசகா கதைப்பினம். அதையெல்லாம் இஞ்சத்தை ஆக்கள் ரெக்கோர்ட் பண்ணிப் போடுவினம். பிறகு தங்கட செலவுக்கு காசு கேப்பினம். அனுப்பாட்டி வீடியோ கோலில கதைச்ச விசயங்கள், படங்கள், வீடியோக்கள் எல்லாத்தையும் அவைக்கு அனுப்பி "இதுகளை பேக் ஐடியில போடுவம். உங்கட குடும்பத்துக்கு தெரியவந்தால் என்ன நடக்குமெண்டு யோசியுங்கோ" எண்டு அன்பாச் சொல்லுவினமாம். பிறகென்ன அவையள் காலம் முழுக்க மானத்தைக் காப்பாத்த காசைக் கொட்டிக் கொண்டே இருக்க வேண்டியதுதான்.**

**இதெல்லாம் சினிமாவில தான் பார்த்திருப்பம். ஆனா இஞ்சயும் அது அமோகமா நடக்குதாம். எதுக்கும் உசாரா இருந்தா,இப்பிடி வன்னியூர் மாதிரி சிக்கல்கள் வராதெல்லோ.**

**உதவி செய்யப் போய் உபத்திரவத்தில மாட்டாதையுங்கோ.**



- பட்சி

# போதுமான எரிபொருள்கள் தற்போதுவரை கையிருப்பு

## விலையும் அதிகரிக்காது என்கிறார் அமைச்சர்



கொழும்பு, ஒக்.23

**நாட்டில் போதுமான எரிபொருள்கள் தற்போதுவரை கையிருப்பில் உள்ளன. எதிர்காலத்தில் எரிபொருள்களின் விலையை அதிகரிக்கும் எண்ணமும் தற்போது இல்லை.**

இவ்வாறு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்கப்படும் எரிபொருளின் விலையை அதிகரிக்காமல் இருக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று மாதங்களாக எரிபொருள் பற்றாக்குறை என்று எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் வதந்தி பரப்பி பொதுமக்களை ஏமாற்றி வருகின்றன.

வதந்திகளை நம்பி, எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு மக்கள் முண்டியடித்துச் செல்கின்றனர்.

இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒரு நாள் அல்லது இரண்டு நாள்களுக்கு பற்றாக்குறை ஏற்படுகின்றது.

ஆனால் பொதுமக்களின் நெருக்கடியை உணர்ந்து, சலுகைகளை வழங்குமாறு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். -என்றார். (ஒ-4)

# அரசின் அனுமதியின்றி பேருந்துக் கட்டணம் உயரும்



கொழும்பு, ஒக்.23

எதிர்பாராது எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால், அரசின் அனுமதியின்றி பேருந்துக் கட்டணத்தை அதிகரிப்போம் என்று தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

லங்கா ஐ.ஓ.சி. டீசல், பெற்றோலின் விலை ஒரு லீற்றர் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 92 ஒக்டேன் பெற்றோலின் புதிய விலை லீற்றருக்கு 162 ரூபாவாகவும், ஒரு லீற்றர் டீசல் 116 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

அதனால் பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. எனினும் எரிபொருள் விலையை உயர்த்தக்கூடாது என்ற அரசின் அறிவிப்பால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலையை அதிகரிக்கவில்லை என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-4)

# வெளிநாட்டு கையிருப்பு 2023 இல் குறைவடையும்

கொழும்பு, ஒக்.23

இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பு 2023 ஆம் ஆண்டுக்குள் 2.5 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறைவடையும் என்று ஃபிட்ச் மதிப்பீட்டு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை தற்போது வெளிநாட்டு இருப்பு நெருக்கடியை எதிர்கொள்கின்றது.

இந்த நிலையில் இலங்கை தனது வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதுபோகும்.

இலங்கையின் பொது மற்றும் வெளிநாட்டு நிதி 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் கீழ்நோக்கிச் செல்கின்றது.

மேலும் இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 2023 ஆம் ஆண்டுக்குள் 2.5 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறையும்.

இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்களை தொடர்ந்தும் மறுத்து வருவதால், வருங்காலங்களில் கடுமையான அபாயங்களை எதிர்கொள்ள நேரிடும். -என்றுள்ளது. (ஒ-4)

# கடவுச்சீட்டுக்கு முற்பதிவு அவசியம்

கொழும்பு, ஒக்.23

கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்குச் செல்வோர் கட்டாயம் முற்பதிவு செய்ய வேண்டும். இல்லாவிடில் அலுவலகங்களுக்குள் பிரவேசிக்க முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்ல பிரதான அலுவலகத்தின் மூலமும், மாத்தறை, வவுனியா, கண்டி, குருணாகல் ஆகிய பிராந்திய அலுவலகங்கள் மூலமும் மீண்டும் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சகல சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளையும் பேணி, மட்டுப்படுத்தப்பட்ட சேவை பெறுநர்களுக்கு வழங்கப்படுகின்றது.

எனவே அவசிய தேவையுள்ள சேவைப்பெறுநர்கள் மாத்திரம் தமக்கு அண்மையிலுள்ள அலுவலகத்துக்கு http://www.immigration.gov.lk/ என்ற இணைய வழியைப் பயன்படுத்தி, திகதி மற்றும் நேரத்தை ஒதுக்க வேண்டும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ஒ-4)

# தே.அ.அட்டை ஒரு நாள் சேவை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.23

தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான ஒருநாள் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நாள் மற்றும் நேரத்தை முற்பதிவு செய்துள்ளவர்களுக்காக எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஒருநாள் சேவையை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-4)

# வீதியை சீரமைத்துத் தருமாறு அமைச்சரிடம் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.23

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் கிராமத்துக்கு இடையிலான வீதியை சீரமைத்து பஸ் சேவையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் கரும்புத் தோட்டக் காணியை பிரதேச மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு பகிர்ந்தளித்தமைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதேச மக்களால் அண்மையில் கௌரவிக்கப்பட்டார்.

இதன்போதே மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

கிராம மக்கள் மேலும் தெரிவிக்கையில்,


ஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் செல்லும் வீதி மிக மோசமாக மாறியதன் காரணமாக பஸ் சேவைகள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நடைபெறவில்லை.

இதன் காரணமாக பல்வேறு தேவைகளுக்காக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் முக்கொம்பன் கிராம மக்கள் போக்குவரத்து வசதி இல்லாமல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். எனவே குறித்த வீதியை விரைவாக சீரமைக்க நடவடிக்கை எடுக்கவும் -என்றனர். (ஐ-13)

# காலபோக நெற்செய்கை ஆரம்பம்; கால்நடைகளைக் கட்டி வளர்க்கவும்

## வவுனிக்குளம் விவசாயிகள் கோரிக்கை



முல்லைத்தீவு, ஒக்.23

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சிறு போக கூட்டத்தின்போது மேலதிக மாவட்டச் செயலரிடம் வவுனிக்குளம் விவசாயிகளால் கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

வவுனிக்குளத்தில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக நெற்பயிர்களுக்கு காவல் இருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. வவுனிக்குளத்துக்கான மேய்ச்சல் தரவைகள் இனங்காணப்படாததன் காரணமாக வயல் நிலங்களுக்குள் கால்நடைகள் புகுந்து அழிவை ஏற்படுத்துகின்றன. எனவே கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இறுக்கமான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது தொடர்பான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கின்றோம். -என்றனர். (ஐ-13)

# பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணரை நியமிக்க தடைகள்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வடக்கு ஆளுநருக்குக் கடிதம்



**யாழ்ப்பாணம், ஒக்.23**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இரண்டாவது பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் அனுப்பியுள்ள அந்தச் சங்கம், கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.**

கொழும்பில் ஊடக சந்திப்பு நடத்திய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் வாசன் இரட்ணசிங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இரண்டாவது பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணருக்கான வெற்றிடம் உருவாக்கப்பட வேண்டும் என்று பொது சேவை ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தியதன் காரணமாக ஆணைக்குழு அதற்கு அனுமதி வழங்கியது,

ஆனால் துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளருடன் சுகாதார அமைச்சும் இணைந்து இந்தப் பதவி வெற்றிடத்தை உருவாக்குவதில் தாமதத்தை ஏற்படுத்துகின்றன.

இது தொடர்பாக எமது சங்கத்தின் நிறைவேற்றுக்குழு வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஆளுநருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்த அனுமதி கோரியுள்ளோம். இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப் பட்டுள்ளது. இந்த விடயத்தில் ஆளுநர் ஒரு தெளிவான முடிவை எடுத்து தீர்வைத் தருவார் என நம்புகின்றோம்.

இந்தப் பிரச்சினை தீர்க்கப் படாவிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவோம். அதன்பின்னரும் நடவடிக்கை எடுக்கப் படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்வோம் என்று பணிப்பாளருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளோம்.

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் விசேட மருத்துவர்தர மருத்துவர்கள் குறைவான அளவில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அங்கு தற்போது 7 விசேட மருத்துவர்கள், 42 தர மருத்துவர்கள் கடமையாற்றுகின்றனர். சத்திர சிகிச்சை நிபுணர்கள் எவரும் இல்லை.

இது தொடர்பாக சுகாதார அமைச்சு தனது கடமையைச் சரியாக நிறைவேற்ற வேண்டும். அமைச்சுக்குப் பல கடிதங்கள் அனுப்பியுள்ளோம். ஆயினும் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. மீண்டும் இந்தக் கோரிக்கையை அரசிடம் முன்வைக்கின்றோம். விரைவில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் மாவட்ட ரீதியில் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும் -என்றார். (எ-இ)

# மின்கட்டணம் அதிகரிக்காது

அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.23

நாட்டில் 24 மணித்தியாலங்களும் தடையின்றி மின்சாரத்தை விநியோகிப்பது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் எவ்விதத்திலும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குப் பின்னர் நாட்டில் மின் விநியோகத்தில் குறைந்தது 45 வீதம் இல்லாமல் போகும். அதனால் குறைந்த பட்சம் நாளாந்தம் 12 மணித்தியாலமாவது நாட்டில் மின் துண்டிப்பு மேற்கொள்ளவேண்டி வரும் என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)



## கோயில்மோட்டை விவசாயிகள் கொழும்பு சென்று போராட்டம்!

கொழும்பு, ஒக்.23

மன்னார், கோயில் மோட்டை காணியில் விவசாயம் மேற்கொண்டு வரும் விவசாயிகள் நாடாளுமன்ற நுழைவாயில் பகுதியில் சில கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த விவசாயிகள் தாம் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்துவரும் கோயில் மோட்டை காணிகளை பறிக்க முற்படும் மன்னார் பங்குத் தந்தைகளை கண்டித்தும், அந்தக் காணிகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்த வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

நாடாளுமன்றத்திற்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், போராட்டத்தை அவதானித்து, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டு சென்றார். அதேவேளை, நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இந்த மாதம் 6 ஆம் திகதியும் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து விவசாயிகள் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். (எ-இ)

# அப்பாவிகள் சிறையில் குற்றவாளிகள் விடுதலை

## அரசைச் சாடும் எதிரணி

கொழும்பு, ஒக். 23

நாட்டில் அப்பாவிகள் பலர் சிறைகளில் அடைக்கப்பட்டு வருகின்றனர். அதேவேளை, குற்றவாளிகள் சகலரும் தற்போது விடுதலையாகிக்கொண்டிருக்கின்றனர். இந்த ஆபத்தான நிலைமையைத் தடுக்க வேண்டும்- இவ்வாறு வலியுறுத்தினார் எதிர்க் கட்சிப் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல. நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்

'நாட்டின் சட்டம் ஒழுங்கு நாளுக்கு நாள் மோசமடைகின்றது என்ற கருத்து உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் ஏற்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் எம்மைச் சந்தித்த வேளையில் நாம் கூறமுன்னர் அவர்களே இந்த நிலைமைகளை எமக்குக் கூறிவிட்டனர். குறிப்பாக அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றியை புதிய அரசு நாசமாக்கி வருகின்றது. சுயாதீன ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் நிறைவேற்று அதிகாரத்தின் தலையீடுகள் அதிகரித்துள்ளன. சந்திரிகா காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து சுயாதீன ஆணைக்குழுக்களை அவர் உருவாக்கினார். ஆனால், மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் இந்தச் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் அவர் கொண்டுவந்தார். நாம் ஆட்சிக்கு வந்து மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்கினோம். ஆனால், புதிய அரசு மீண்டும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து சகல சுயாதீன ஆணைக்குழுக்களையும் நாசமாக்கி நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது.

அவசரமாக சட்டம் இயற்றப்படுகின்றது. புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமாகவே அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் வேளையில் சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சுயாதீன ஆணைக்குழுக்களின் உரிமைகளைப் பலப்படுத்தாது போனால் அரசு சர்வதேசத்திடம் செல்ல முடியாது. ஆகவே, இதனைக் கருத்திற்கொள்ள வேண்டும் -என்றார். (ஒ-22)



## சைவ வாழ்வியல் முறைகளை பாதுகாத்தவர் செல்லத்துரை

**இந்துக்குருமார் அமைப்பு இரங்கல்**

சைவ சமயத்தின் முதுசமாக விளங்கியவர் சைவப்புலவர் செல்லத்துரை. இவர் சைவ வாழ்வியல் முறைகளைப் பாதுகாத்து பேணியதுடன், வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர்.

இவ்வாறு இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவசிறி கு.வை.க.வைத்தீஸ்வரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

அவர் இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை முழுவதும் பல சைவப் புலவர்கள் உருப்பெறக்காரணமானவர் இவர். புராணபடன மரபு இலங்கையில் தழைக்க வேண்டும் என்று தன்னுடைய சக்திக்கு ஏற்ற வகையில் பல முயற்சிகள் செய்து இயன்ற வரை வெற்றி கண்டவர்.

தனது சீர்பெற்ற கல்விப்பணி மூலம் பல உயர்பண்பாளர்களை உருவாக்கிய பெருந்தகை. சரஸ்வதி வித்தியாலயத்தில் குருக்கள் காலத்தில் ஆசிரியப்பணி புரிந்துள்ளார். நிறைவாக தனது கல்விப் பணியில் அதிபராக பணியை நிறைவு செய்து. இறைபதமெய்தும் வரை பல்வேறு கோணங்களில் தனது சமூகப்பணியை விரிவான முறையில் செயல்படுத்தியவர். -என்றார். (ஒ-4)

# சொந்தக் காணியோ, வீடோ இல்லை கருங்காலிமோட்டை மக்கள் அவதி

மன்னார், ஒக்.23

**சொந்தமாக காணியோ, வீடோ அற்ற நிலையில், உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ள சுமார் 10க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் அவதியை எதிர்கொண்டுள்ளனர்.**



மாந்தை மேற்கு கருங்காலி மோட்டை கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களே இந்த நிலைமையை எதிர்கொண்டுள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட இவர்கள், தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் திருமணமானவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் தங்கியுள்ள வீடுகளுக்கு அருகாமையில் 12 ஏக்கருக்கும் அதிகமான அரச காணிகள் உள்ள போதும், அவற்றைத் தனிநபர்கள் அடாத்தாகப் பிடித்து வேலி அடைத்துள்ளனர்.

இதனால் காணியோ வீடோ அற்ற நிலைமையில் இவர்கள் வசிக்க வேண்டியுள்ளது. தொழில் வருமானம் இல்லாமல் தங்களுடைய வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்ல முடியாமல் திண்டாடி வருகின்றனர்.

கருங்காலிமோட்டையில் 18 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். இவர்களில் சுமார் 9 குடும்பங்களுக்கு வீடுகளோ, காணிகளோ இல்லை.

தொழில் வாய்ப்பற்றுள்ள இவர்களிடம் சொந்தக் காணிகள் இல்லாத காரணத்தால், சுய தொழில் முயற்சிகளையோ, வீட்டுத் தோட்டச் செய்கையையோ மேற்கொள்ள முடியாதுள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

எமது வீடுகளுக்கு முன்னால் அரச காணிகள் உள்ளன. அவற்றை ஆக்கிரமித்து தனிநபர்கள் வேலி அடைத்து உள்ளமையால் சிறு ஒற்றையடிப் பாதையால் பயணிக்க வேண்டியுள்ளது. எமக்கு இதுவரை எந்த ஒரு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவில்லை.

இந்தியாவில் பிறந்த குழந்தைக்கு இங்கே பிறப்புச் சான்றிதழ் எடுப்பதற்கு கூட சிரமமாக உள்ளது. வீடு, காணி இல்லாமையால், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளோம். இதனால் அடிக்கடி குடும்பப்பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குடிதண்ணீர்ப் பிரச்சினையும் உள்ளது. எமது பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள கிராம சேவையாளர் எம்மை நேரடியாகச் சந்திப்பதில்லை. உதவியாளர்கள் மூலமாகவே தொடர்பு கொள்கின்றார். அதனால் எமது பிரச்சினைகளைக் கூற முடியாதுள்ளது.

அரசு கைவிட்டுள்ள நிலையில், அரச சார்பற்ற நிறுவனங்கள் எமக்குத் தேவையான வாழ்வாதார உதவிகள் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். மாவட்டச் செயலரும் எமது நிலைமையைக் கருத்தில் கொண்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். -என்றனர். (ஒ-4-213)

# 'புளொட்'டின் செயலாளர் சதானந்தன் காலமானார்

யாழ்ப்பாணம், ஒக். 23

புளொட் அமைப்பின் செயலாளர் சுப்பிரமணியம் சதானந்தன், சுகவீனம் காரணமாக நேற்று உயிரிழந்தார்.

அவரது இறுதிக்கிரியைகள் கொக்குவிலில் உள்ள அவரது வீட்டில் நேற்று நடைபெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் பொதுசெயலாளருமான த.சித்தார்த்தன், வடக்கு மகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி. கிழக்கு பிரதேசசபை தவிசாளர் தி.நிரோஷ் உட்பட்ட அரசியல் பிரமுகர்கள், நலன்விரும்பிகள், கட்சித் தொண்டர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். (து-125)

## மட்டக்களப்பு மாநகர

# ஆணையாளருக்கு எதிரான வழக்கு மன்றால் தள்ளுபடி!

மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் ம.தயாபரனுக்கு எதிராக மாநகர மேயரால் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கை மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் தயாபரனுக்கும் மாநகர மேயர் தி.சரவணபவனுக்கும் இடையில் முறுகல் நிலை நிலவிவருகின்றது. மாநகர கட்டளைச் சட்டங்களை கருத்திற்கொள்ளாது மாநகர சபை செயற்பட முடியாது எனச் சுட்டிக்காட்டி, சபை நடவடிக்கைகளில் ஆணையாளர் தலையீடு செய்ததையடுத்து இருவருக்கும் இடையே முறுகல் நிலைமை ஆரம்பித்திருந்தது.

அதையடுத்து மாநகர சபை தீர்மானத்தினூடாக ஆணையாளரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அந்த அதிகாரங்கள் அனைத்தும் பிரதி முதல்வருக்கு மாறறப்பட்டன. எனினும், சபையின் தீர்மானத்தை ஆணையாளர் கவனத்தில் எடுத்து செயற்படவில்லை. ஆணையாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் நாடாளுமன்றத்தின் ஊடாக வழங்கப்பட்டவை எனவும் அவற்றைக்கு குறைக்கும் அதிகாரம் மாநகர சபைக்கு இல்லையெனவும் சுட்டிக்காட்டி, அவர் தொடர்ச்சியாக செயற்பட்டு வந்த நிலையில் ஆணையாளருக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மாநகர மேயரால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் இடைக்கால நிவாரணமாக கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தீர்ப்பொன்று வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பின் ஊடாக உண்மையான நிர்வாகத்தையே ஆணையாளர் மேற்கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்டது.

இதற்குப் பின்னர் இந்தத் தீர்ப்பை ஆணையாளர் மீறிவிட்டார் என்றும் நீதிமன்றத்தை அவமதித்துள்ளார் என்றும் தெரிவித்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்று ஆணையாளருக்கு எதிராக மேயரால் மட்டடக்களப்பு உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் மட்டக்களப்பு மேல் நீதி மன்றத்தில் நகர்த்தல் பத்திரம் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வழக்குச் செலவையும் மனுதாரர் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. (எ-இ)

# பசுமை விவசாயமே அரசின் இலக்கு

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.23

சுற்றாடலையும், மக்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பதுடன், அதிக இலாபத்தை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதே அரசின் முக்கிய எதிர்பார்ப்பாகும். அதனைவிட ஒரு போகம், இரு போகத்துக்கு மாத்திரமன்றி, பல சந்ததியினர் பயன்பெறச் செய்ய பசுமை விவசாயத்தை முன்னெடுப்பதே எமது இலக்கு என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

கமநல சேவைகள் உத்தியோகத்தர்களுடன், வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயிகள் முகங்கொடுக்கும் அசௌகரியங்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், எதிர்பார்க்கும் இலக்கை நோக்கிப் பயணிக்க முடியும். அது தொடர்பாக அரசை அறிவுறுத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும்.

பசுமை விவசாயத்தில் ஈடுபடுவதால், பயிரிடப்படும் நில அளவைக் குறைக்க இடமளிக்க முடியாது. சேதனப் பசளைப் பயன்பாட்டுடன், முன்னோக்கிப் பயணிப்பதற்காக விவசாயிகளை ஊக்கப்படுத்துவது அனைவரதும் பொறுப்பாகும்.

உலகம் ஏற்றுக்கொண்டுள்ள உயர் சுற்றாடல் பாதுகாப்புடன் கூடிய உரத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, நைட்ரஜன் உரத்துடன் திரவ நைட்ரஜனைப் பெற்றுக்கொள்வதற்கும் அரசு நடவடிக்கை எடுத்தது.

இதனால் விவசாயிகளுக்குத் தேவையற்ற அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த உரவகைகளை விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுப்பதன் மூலமும், விவசாயிகளுக்குள் இருக்கும் பயம் மற்றும் பின்வாங்கும் தன்மையை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

விவசாயிகளுக்கு வழங்கியுள்ள ஊக்கக் கொடுப்பனவுகள், அடிப்படைக் கொடுப்பனவுகள் என்பன தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. எதிர்கால போகங்களின் போது, சேதனப் பசளை உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காகத் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது. -என்றார். (ஒ-4)



# நடத்துநர் இல்லாது பேருந்துச் சேவை

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் கோரிக்கை

கொழும்பு, ஒக்.23

நடத்துநர் இல்லாது பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கு வசதியாக, போக்குவரத்துச் சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்துமாறு, தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேயரத்ன தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றால் வருவானம் இழந்துள்ள பல நடத்துநர்கள் மாற்றுத் தொழில்களை நாடியுள்ளனர். இதனால் நடத்துநர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

பல பேருந்துகள் ஏற்கனவே நடத்துநர்கள் இல்லாமல் சேவையில் ஈடுபடுகின்றன.

மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளில் நடத்துநர் அல்லது உதவியாளர் இல்லாமல் பேருந்துகள் சேவையில் ஈடுபடும் வண்ணம் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும். பேருந்துக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக பேருந்துச் சாரதிக்கு அருகில் ஒரு பெட்டி அமைக்கப்பட வேண்டும். மக்கள் அதனைப் பின்பற்றி நேர்மையாகச் செயற்படுவார்கள் என்று நம்புகின்றோம். -என்றார். (ஒ-4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்கெட்ட பிறகு...


**போ**ர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்ட பின்னர் இலங்கையில் நடந்த மிகப் பெரிய – மோசமான குண்டுத்தாக்குதல் சம்பவமாக 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலைச் சொல்லலாம். அப்போது நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்தது நல்லாட்சி அரசு. ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடையேயான கசப்புணர்வு இந்தத் தாக்குதலைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேடுவதற்கு ராஜபக்சக்களுக்கு வழிவகுத்தது. ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தை சிங்கள மக்கள் மத்தியில் இனக்குரோதமாக விதைத்து, மக்களின் பாதுகாப்பு அரண் என்றாலே ராஜபக்சக்கள்தான் என்ற விம்பத்தை உருவாக்கி, 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் மூலம் ராஜபக்சக்களின் மீள்வருகை பலமாக நிகழ்ந்தது.

ராஜபக்ச அரசு சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் அதி உச்ச ஆசீர்வாதத்துடன் ஆட்சி பீடமேறி நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இலாவகமாகச் சுருட்டியது. ஆனால் எந்த வேகத்துடன் பேரெழுச்சி அடைந்தனரோ அதைவிட வேகமாக தங்கள் மீதான சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் எதிர்ப்பையும் அவர்கள் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்னொரு வகையில் சொல்வதானால் ராஜபக்சக்கள் தங்கள் ஆட்சியை தக்க வைப்பதற்கு கடுமையான விலை கொடுக்கவேண்டியிருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்த கருத்து உற்று நோக்கத்தக்கது. ''அப்பாவி மக்களின் குருதியைச் சிந்தி யாராவது அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தால் அந்த அதிகாரத்தை அனுபவிக்கக் கிடைக்காது'' என்று ஈஸ்டர் தாக்குதலின் இரண்டரை ஆண்டு நினைவு நாளில் கூறியிருக்கின்றார். அவர் நேரடியாக இப்போதைய ஆட்சியாளர்களான ராஜபக்சக்களையே குற்றம் சுமத்துகின்றார் என்பது குன்றில் ஏற்றி வைத்த தீபம் போன்று வெளிப்படையாகவே தெரிகின்றது.

ஈஸ்டர் தாக்குதல் நடந்த காலத்திலும் இதேபோன்றதொரு குற்றச்சாட்டு ராஜபக்சக்கள் மீது முன்வைக்கப்பட்டது. அது தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும், இந்தத் தாக்குதலின் பின்னணியில் யாராவது அரசியல் ஆதாயம் அடைந்திருப்பார்களானால் அது தொடர்பிலும் கரிசனை செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.

ஆனால், கர்தினால் மல்கம் ரஞ்சித்தோ, அப்போதைய ஆட்சியாளர்கள் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய சஜித் பிரேமதாசவை ஓரம்கட்டி, ராஜபக்சக்களை ஆதரித்தார். அவரது வார்த்தையில் சொல்வதானால், ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதியை நிலைநாட்டாமல் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் தன்னைச் சந்திக்கக் கூடாது என்றவர், அப்போதைய வேட்பாளரான ஜனாதிபதி கோத்தாபயவை மாத்திரம் சந்தித்திருந்தார்.

ஒரு வகையில் ராஜபக்சக்களின் மீள் பிரவேசத்துக்கு கர்தினாலும் காரணமாயிருந்தார். ஆனால் ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் அவர்களின் பரவணிப் பழக்கத்தால் நீதியை நிலைநாட்டத் தவறியிருந்தனர். இந்தப் பின்புலத்திலேயே கர்தினால் ஆட்சியாளர்களை எச்சரிக்கும் தொனியில் அண்மைக்காலமாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். இப்போது ஆட்சியிலிருக்கும் ராஜபக்சக்கள் மீது நேரே விரல் சுட்டுகின்றார். ஆனால் இவையெல்லாம் கண்கெட்ட பின்னரான சூரிய நமஸ்காரமே.




# மக்களின் இரத்தத்தைச் சிந்தி பெற்ற அதிகாரம் நிலைக்காது

## பேராயர் மல்கம் ரஞ்சித் எச்சரிக்கை



**கொழும்பு, ஒக்.23**

**அப்பாவி மக்களின் இரத்தத்தைச் சிந்தி யாராவது அதிகாரத்தைக் கைப்பற்றி இருந்தால், அவர்களுக்கு அந்த அதிகாரத்தை அனுபவிக்கக் கிடைக்காது. சம்பந்தப்பட்டவர்கள் அதனை நினைவில் வைத்து கொள்ள வேண்டும்.**

இவ்வாறு கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் சம்பவம் நடைபெற்று இரண்டரை ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் முகமாக உயிரிழந்தவர்களுக்கான விசேட ஆராதனை நேற்றுக் காலை நடைபெற்றது.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய போதே கொழும்பு பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்புக்கு பின்னர் இலங்கை அந்த சாபத்தால் பாதிக்கப்படுவது போல் தோன்றுகிறது, ஏனெனில் ஆட்சியில் இருப்பவர்கள் நாட்டை நடத்துவது கடினமாக இருக்கும் போது எவரும் எதை வேண்டுமானாலும் மகிழ்ச்சியாக சம்பாதித்து வாழ முடியாது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தவர்கள் நீண்ட காலம் ஆட்சியை அனுபவிக்க முடியாது. இன்று நாட்டை ஆள்பவர்களும் ஈஸ்டர் ஞாயிறு சதித்திட்டத்தின் பங்காளிகளா என்று நாம் சில நேரங்களில் ஆச்சரியப்படுகிறோம். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு பின்னால் உள்ள உண்மையை வெளிக்கொணர நாங்கள் முடிந்த அனைத்தையும் செய்துள்ளோம், இப்போது உண்மையை வெளிக்கொணரவும், துயரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவும் நாங்கள் தெய்வீகத் தலையீட்டை நாடுகிறோம் - என்றார். (எ-இ)

# மன்னார் விவசாய அமைப்புகளால் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம்

மன்னார், ஒக்.23

விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உரம் மற்றும் கிருமி நாசினிகளை வழங்கக்கோரி மன்னார் விவசாய அமைப்புகளால் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் திங்கட்கிழமை உயிலங்குளம் கமநல சேவை நிலைய வீதியில் முற்பகல் 10 மணியளவில் இந்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பெரும்போக விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில் விவசாயிகள் உரம் மற்றும் கிருமிநாசினி இன்மையால் விவசாய நடவடிக்கைகளில் பின்னடைவைச் சந்தித்துள்ளனர். விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உரம் மற்றும் கிருமி நாசினிகளை விரைவாகத் தடையில்லாமல் வழங்கக்கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புகள் மற்றும் விவசாயிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மன்னார் மாவட்ட செயலரிடம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (ஐ-213)


# சுன்னாகம் தபால் நிலையம்




## அரைகுறை கட்டடத்தினுள்ளே பதுங்கியிருக்கும் ஊழல்

மிஸ்டர் கழுகு

30.12.2019 திகதி வரை நிறைவு பெற்ற வேலைக்கான கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் 31.08.2020 அன்று ஒப்பந்தகாரருடன் பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் (Mutual Termination) மேற்கொள்ளப்பட்டது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்காக பிரதம கணக்காளர், பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு எழுதிய பதிலில் குறிப்பிட்டுள்ளார். ஒப்பந்த நடைமுறைகளில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (சீடா) ஒழுங்கு விதிகளே பின்பற்றப்படுகின்றன. அதன் பிரகாரம் திட்டம் ஒன்றை செய்யாமல் விடுவதற்கு ஒப்பந்தகாரருக்கு அதிகாரமில்லை. ஒப்பந்தத்தை வழங்கியவர் ஒப்பந்தத்தை முடிவுறுத்தலாம். ஒப்பந்தகாரர் முடிவுறுத்தி இழப்பீடு கோரலாம். பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தலை மேற்கொள்ளலாம். பரஸ்பர முடிவுறுத்தலை மேற்கொள்ளும் போது இரு தரப்பிலும் பிரச்சினைகள் இருந்து இரண்டு தரப்பும் சேர்ந்து அதன் சூழலுக்கு அமைவாகவே அதனை




முடிவுறுத்திக் கொள்ள முடியும்.

ஆனால் 10.12.2019 ஆம் திகதி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருக்கவேண்டியபோதும் கால நீடிப்பு 30.12.2019 வரையில் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னரே பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்த வழங்குநரான மாவட்டச் செயலகத்தால், ஒப்பந்தகாரருக்கு சார்பாக இங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*இவ்வாறு மாவட்டச் செயலகம் நடந்து கொண்டதன் நோக்கம் என்ன? அரசுக்கு நிதி இழப்பீட்டை ஏற்படுத்தியமைக்கு காரணம் என்ன?*

நிதி கொடுப்பனவு வழங்குவதில்கால தாமதம் என்று மாவட்டச் செயலர் குறிப்பிட்டிருந்தாலும், 2020ஆம் ஆண்டு கட்டுநிதி முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த சரத்துக்கு அமைவாக ஒப்பந்தகாரர் செயற்பட்டிருந்தால் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கும். அல்லாவிடின் ஒப்பந்தகாரரிடம் இழப்பீட்டை பெற்று திட்டத்தை வெற்றிகரமாக முடித்திருக்கலாம். இவ்வாறான வழிமுறைகள் இருந்தும் அவை எதனையும் மாவட்டச் செயலர் அணுகாததன் ஊடாக, இந்தத் திட்டத்தை வேண்டுமென்றே தோற்கடிக்க அவர் முயன்றமை புலனாகிறது.



### முரணான தகவல்கள் - அம்பலமாகும் உண்மைகள்

மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளரால் 18.12.2020ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக, மேற்படி வேலைத் திட்டம் 'முடிவுறுத்தப்படவேண்டியுள்ளதாகவும்' எனவே செய்யப்பட வேண்டி வேலைகளின் பெறுமதியை பரிந்துரைத்துத் தருமாறும் யாழ்ப்பாண கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், 31.08.2020ஆம் திகதி பரஸ்பர ஒப்பந்த முடிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் குறிப்பிட்டுள்ளார்.

*உண்மையில் 31.08.2020ஆம் திகதி பரஸ்பர ஒப்பந்தம் முடிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அதிலிருந்து 4 மாதங்களின் பின்னர் அதாவது 18.12.2020ஆம் திகதி ஒப்பந்தம் 'முடிவுறுத்தப்படவேண்டியுள்ளது' என்ற வாசகத்துடன் திட்டமிடல் பணிப்பாளரால் கடிதம் எப்படி அனுப்பப்பட்டிருக்கமுடியும்?*


தேசிய கணக்காய்வுத் திணைக்களம் இதனை அவதானிப்புக்கு உட்படுத்தியிருந்தபோதும் இதற்கு மாவட்டச் செயலர் பதில் எதையும் வழங்கவில்லை. இதன்ஊடாக, இந்த ஒப்பந்தம் 31.08.2020ஆம் திகதியில் முடிவுறுத்தப்பட்டதாக காட்டப்பட்டது பொய்யென்பது நிரூபணமாகின்றது. இதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் மற்றொரு விடயத்தையும் தேசிய கணக்காய்வுத் திணைக்களம் தனது அவதானிப்பில் குறிப்பிட்டுள்ளது.

16.12.2020ஆம் திகதி மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், வேலைத்திட்டம் முடிவுறுத்தப்பட்ட பின்னர் ஒப்பந்தகாரரால் செய்து முடிக்கப்படாத வேலைக்கு அறவீடு செய்ய வேண்டி உள்ளதாகவும் அதற்கான அறவீட்டு வீதம் குறிப்பிட்ட கேள்வி ஆவணத்தை வழங்குமாறு பெறுகை அலகு கணக்காளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். மாவட்டச் செயலர் குறிப்பிட்டதைப்போன்று 31.08.2020 அன்று ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தால், அதன் பின்னர் சுமார் 4 மாதங்கள் கழித்து திட்டமிடல் பணிப்பாளர் இவ்வாறான ஒரு கடிதத்தை வரைந்திருக்கவேண்டியதில்லையே. இவையிரண்டும், மாவட்டச் செயலர் குறிப்பிட்டதைப்போன்று 31.08.2020ஆம் திகதி ஒப்பந்தம் முடிவுறுத்தப்படவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

### அரசுக்கு இழப்பு

31.08.2020 அன்று ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும் போது வழங்கப்பட்ட இறுதிக் கொடுப்பனவுச் சிட்டையில் அறவீட்டு கழிப்பனவு செய்யப்படவில்லை. மேற்படி திகதியில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படவில்லை என்பது மேலேயுள்ள விடயங்களில் தெளிவாகப் புலனாகின்றமையாலும், 16.12.2020ஆம் திகதிய கடிதம் மூலம் அறவீட்டு வீதத்தை கழிப்பனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளபோதும் அது அறவிடப்படாததன் ஊடாக, ஒப்பந்தகாரருக்கு பக்கச் சார்பாக அவரது நலன் மேலோங்கும் வகையில் மாவட்டச் செயலர் செயற்பட்டுள்ளார்.

### திட்டமிட்ட தவறு



# இன்றைய நாள்

**மேடம்:** எதிர்பார்த்த புதிய செய்திகள் சற்றுத் தாமதமாகவே வரும். நெருங்கிய உறவினர் பற்றி இருந்து வந்த கவலை தீரும். பண நெருக்கடி தீரும். குழந்தைகளால் நிம்மதி ஏற்படும்.

**இடபம்:** நவீன உபகரணங்களை வாங்குவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில்கூட்டாளிகளை அனுசரித்து செல்வது நல்லது. எதிர்பாராத உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** பணியாளர்களுக்கு திட்டமிட்ட பயணங்கள் தடைப்படும். எச்சரிக்கையுடன் செயல்பட்டுசிரமத்தில் இருந்து மீளுவீர்கள். திறமை வெளிப்படும். திட்டமிட்ட விஷயம் சிறப்பாக நடைபெறும்.

**கடகம்:** உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது பற்றிச் சிந்திப்பீர்கள். சங்கடம் தீரும். சந்தோஷம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். புதிய மாற்றம் ஒன்று உருவாகும்.

**சிம்மம்:** நாளை வரும் என நினைத்த நன்மை இன்றே வந்து சேரலாம். உங்களின் அந்தஸ்தும், செல்வாக்கும் உயரும்படியான செயல்கள் நிகழும். வளர்ச்சி அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** தொழில் பற்றிய திட்டம் ஒன்று வெற்றி பெறும். பெரிய மனிதர்கள் உங்களுக்கு தரும் வாக்குறுதியை நம்ப வேண்டாம். உடல் நலத்தில் கவனம் தேவை.

**துலாம்:** பேச்சிலும் செயலிலும் ஆற்றல் மிகும். குதூகலமான நாள். பணி மாற்றம் பற்றி நன்கு யோசித்த பிறகே செயற்பட வேண்டும். செலவுகளால் கையிருப்புக் கரையலாம். கவலை வேண்டாம்.

**விருச்சிகம்:** உங்கள் மீது சுமத்தப்பட்டிருந்த வீண் பழி அகலும். பணிச்சுமை கூடும். பிறருக்காக பொறுப்புகளை ஏற்க வேண்டாம். அதுவே நல்லது. செல்வாக்கைப் பயன்படுத்தி மற்றவர் பயன்பெறுவர்.

**தனுசு:** தள்ளிப்போன விஷயம் ஒன்று தானாக முடிவடையும் நாள். இடம் வாங்க, விற்க எடுத்த முயற்சிகள் இன்று கைகூடும். ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடியே வந்து சேரலாம்.

**மகரம்:** பணியிடத்தில் யாருடைய வம்புக்கும் போக வேண்டாம். உங்களுடைய நீண்ட நாள் ஆசை இன்று நிறைவேறும். மகிழ்ச்சி கூடும். உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார்கள்.

**கும்பம்:** திருமணத்துக்காக காத்திருப்போருக்கு வரன்கள் தேடி வரும். வாழ்வில் வளர்ச்சி கூடும். எதிர்பாராத தொகை ஒன்று கைக்கு வந்து சேரும். சுபவிஷயங்கள் திருப்தி தரும்..

**மீனம்:** பணியாளர்கள் எடுத்த விஷயத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள். தாயின் உடல்நலம் மேம்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. சமூக சேவையில் ஆர்வம் காட்டுவீர்கள்.

## ஸ்கொட்லாந்து செல்கிறார் பிரதமர் மோடி


புதுடில்லி, ஒக்.23
இங்கிலாந்து ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் சர்வதேச பருவநிலை மாற்ற மாநாடு அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்வதற்காக இந்தியா சார்பில் பிரதமர் நரேந்திரமோடி எதிர்வரும் 31ஆம் திகதி கிளாஸ்கோ நகருக்கு செல்லவுள்ளார்.
இந்த மாநாட்டில் உலகம் முழுவதும் இருந்து 120 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# 100 கோடி தடுப்பூசி ஏற்றல்; இந்தியாவுக்குப் பாராட்டு

புதுடில்லி, ஒக்.23
**இந்தியாவில் கடந்த ஜனவரி தொடக்கம் செலுத்தப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை 100 கோடியை கடந்தமைக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டுத் தெரிவித்துள்ளது.**




கடந்த 9 மாதங்களில் 100 கோடி பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தி இந்தியா சாதனை படைத்துள்ளது. இதற்கு உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதனோம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,
“கொரோனாவில் இருந்து மக்களைப் பாதுகாக்கவும், தடுப்பூசி இலக்குகளை அடையவும் பெரும் முயற்சி செய்து வரும் பிரதமர் நரேந்திர மோடி, விஞ்ஞானிகள், சுகாதாரத் துறை ஊழியர்கள் மற்றும் இந்திய மக்களுக்கு வாழ்த்துக்கள்’ என குறிப்பிட்டுள்ளார். (ச)



## மது குடித்தால் கூண்டுச்சிறை

புதுடில்லி, ஒக்.23
குஜராத் மாநில மோதிபுரா எனும் ஊரில் எவரேனும் குடிபோதையில் இருப்பது கண்டறியப்பட்டால் அங்கு இதற்கென உருவாக்கப்பட்டுள்ள இரும்புக் கூடு ஒன்றில் அவர்கள் விலங்குகளைப் போல ஓர் இரவு அடைத்து வைக்கப்பட்டு தண்டனை வழங்கப்படுகிறது.
அத்துடன் அபராதமும் விதிக்கப்படுகிறது. அபராதம் செலுத்தினால் மாத்திரமே அவர்கள் கூண்டுச் சிறையில் இருந்து விடுவிக்கப்படுவர். மதுவின் கோரத்தால் சாவடைந்து வருவோரின் எண்ணிக்கை அங்கு அதிகரித்து வருவதால் அதிரடியாக இந்தத் தண்டனை விதிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)


# சிறுவர்களுக்கான தடுப்பூசி பெப்ரவரியில் கிடைக்கும்


புதுடில்லி, ஒக்.23
சிறுவர்களுக்குப் போடப்படும் தடுப்பூசிகளும் பிரத்தியேகமாக ‘கோவாவேக்ஸ்’ என்ற பெயரில் தயாரிக்கப்படவுள்ளது என சீரம் இன்ஸ்டிடியூட் நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார்.
இந்தத் தடுப்பூசி எதிர்வரும் பெப்ரவரி மாதம் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு போடப்படும்



தடுப்பூசியை பிரத்தியேகமாக ‘கோவாவேக்ஸ்’ என்ற பெயரில் தயாரிக்க உள்ளோம். இந்த மருந்து விரைவில் சோதனைகள் முடிந்து பயன்பாட்டுக்கு வரும். அதன்படி அடுத்த ஆண்டு பெப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் இந்தத் தடுப்பூசி மருந்துகள் சிறுவர்களுக்கு வழங்கப்படும். அத்துடன் இந்தக் கொரோனாத் தடுப்பூசி மருந்துகளை உலக சுகாதார நிறுவனத்தின் வழியாக வெளிநாடுகளுக்கும் அனுப்பவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# சுன்னாகம் தபால் நிலையம்






திகதி முத்திரையுடன் தகவலறியும் உரிமைச்சட்டத்தில் வழங்கப்பட்ட கடிதம்

ஒப்பந்தம் கால நீடிப்புச் செய்யப்பட்ட 31.12.2019 ஆம் திகதிக்குப் பின்னர் ஒப்பந்தகாரர், கட்டடங்கள் திணைக்களம் என்பனவற்றால் வழங்கப்பட்ட சகல ஆவணங்களிலும் திகதி முத்திரை இடப்படவில்லை. இது தொடர்பில் உள்ளக கணக்காய்வாளர், தேசிய கணக்காய்வுத் திணைக்களம் என்பன சுட்டிக்காட்டியுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு தடவையும் திகதி முத்திரை இடப்படாமைக்கு ‘தவறுதலாக அது நேர்ந்து விட்டது’ என்று மாவட்டச் செயலர் பதிலளித்துள்ளார். ஒரு முறை தவறு நேரலாம். ஆனால் தொடர்ச்சியாக ஒரே தவறு நேர்ந்தால், அது திட்டமிட்ட நடவடிக்கைதான் என்பது வெள்ளிடைமலை.
இதேவேளை இந்த திட்டநடவடிக்கையின்போது பரிமாறப்பட்ட கடிதங்களின் பிரதிகளை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரியபோது 5 கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. 5 கடிதங்களிலும் திகதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் நிர்வாகத் திகதி முத்திரையும் இடப்பட்டுள்ளது.
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்கிய திகதி முத்திரையிடப்பட்ட கடிதங்களை கணக்காய்விலிருந்து மாவட்டச் செயலகம் மறைத்துள்ளது. அல்லது திகதி முத்திரையிடப்படாத கடிதங்களை கணக்காய்வுக்கு சமர்ப்பித்து, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்காமல் மறைத்துள்ளது. ஏதோ ஒரு வகையில் மாவட்டச் செயலகம் மறைப்புச் செய்துள்ளமை புலனாகின்றது. இதன் ஊடாக ஒரு மோசடி நடவடிக்கை இடம்பெற்றுள்ளது தெரியவருகின்றது.

(நாளை தொடரும்)

# விக்னேஸ்வரனையும், ஆயரையும் சந்தித்தார் வடக்கு ஆளுநர் ஜீவன்!

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்கு மாகாண புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ்ப்பாணத்தில் நேற்று யாழ். ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையிடம் ஆசி பெற்றதோடு, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரனையும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதுமட்டுமன்றி, யாழ்.சிறைச்சாலைக்கும் சென்று நிலைமைகளை அவதானித்தார். கைதிகளின் நலன்கள் கவனம் செலுத்தினார்.

இதேவேளை, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நிரந்தர நியமனம்கோரி சுமார் 8 மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் சுகாதாரத் தொண்டர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார். (து)

## விஞ்ஞான...

முறையை விஞ்ஞான முறைப்படி அனுமதியுங்கள் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இழுவைப் படகுகள் தொடர்பில் கண்மூடித்தனமான சிந்தனைகள் எங்கள் மத்தியில் காணப்படுகின்றன. உலகில் இரண்டு நாடுகள் மட்டுமே இழுவைப் படகை தடை செய்துள்ளன.

அடி மடி என்பதுதான் தவறானது. அது கடலின் அடிவரையுள்ள வளங்களை சுரண்டுவதன் மூலம் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. மீன்வளம் முழுவதுமாக அழிக்கப்படுகின்றது. ஆழம் குறைந்த பகுதிக்கு வரும் போதே இந்தப் பிரச்சினை உருவாகிறது.

கடலோரக் காவல்படை கடற்படை என்பன நவீன முறைகள் கொண்டிருந்தும்கூட இருநாட்டு மீனவர்களும் எல்லை தாண்டுவதை தடுக்க முடியவில்லை. இரு நாட்டு மீனவர்களுக்கும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இதனை தவிர்க்க வேண்டும். இரு நாட்டு அரசுகளும் பேசி இதற்கு முடிவுகட்ட வேண்டும். இரண்டு பகுதியிலும் உயிர்ச் சேதங்கள் வரக்கூடா.

மீனவர்கள் தவறு செய்தால் அவர்களை கைதுசெய்யுங்கள் அவர்களை அடிப்பதோ துன்புறுத்துவதோ உங்களுடைய பணி அல்ல. தென்னிலங்கை மீனவர்கள் வடபகுதி கடலில் தொழில் செய்கின்றார்கள். இதனை அனுமதிக்க முடியாது.

எங்கள் நாட்டு மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்குரியது. அதைப்போல இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது இந்திய அரசின் பொறுப்பு. தீவகத்தில் இந்திய படகுகள் பாதிக்கப்பட்டமைக்கு இலங்கை கடற்படை காரணமாக விளங்குகின்ற நிலையில், கடற்படையால் கைது செய்யப்பட்ட இருவரும் தாயகம் திரும்பிய பின்னரே உண்மை நிலையை கண்டறிய முடியும்.

கற்களை வைத்துக் கொண்டும் போத்தில்களை வைத்துக்கொண்டும் உடைப்பதும், அடிப்பதும், மீன்களைப் பறிப்பதும், கொல்வதும் உங்கள் வேலை அல்ல.

உயிரிழந்த தமிழ் நாட்டு மீனவக் குடும்பங்களுக்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலைகளையும் தெரிவித்துக் கொள்கிறேம். - என்றார். (து-26)

## தேர்தல்கால...

உள்ளூர் இழுவை மடி தொடர்பில் நாடாளுமன்றத்தில் நிறைவேறிய பிரேரணையை சட்டவரைவாக மாற்றித் தரவேண்டும் என்று குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் ஆலோசகர் ம.இமானுவல் கோரிக்கை விடுத்தார்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருநகர் பிரதேசத்தில் 400 இழுவை மடி தொழிலாளர்களும் 200 சிறுபடகு தொழிலாளர்கள் மற்றும் 100 தூண்டல், கடல் அட்டை தொழில் செய்பவர்கள் என பலதரப்பட்டவர்களை உள்ளடக்கியதுதான் குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கமாகும்.

நாம் கடல் வளங்களுக்கு சேதம் விளைவிக்காத தொழில் உபகரணங்களை பின்பற்றி தொழிலை மேற்கொண்டு வருகின்றோம். எங்களுடைய இயந்திர படகு. தொழில் உபகரணங்களுடன் ஒப்பிடும்போது இந்திய தொழில் உபகரணங்கள் படகுகள் பல மடங்கு பெரியதாக காணப்படுகின்றன.

இந்தியர்கள் இரட்டைமடி கொண்ட தொழில் உபகரணங்களை வைத்து நமது பிரதேசத்தில் தமது தொழிலை மேற்கொண்டு வருகிறார்கள்.

2017 ஆம் ஆண்டில் தடைச்சட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று ஒரு யோசனை முன்வைக்கப்பட்டது

இதற்கு முக்கிய காரணமாக அந்த நேரத்தில் குறிப்பிடப்பட்ட விடயம் இந்திய இழுவைமடி தொழிலை நாங்கள் எமது பிரதேசத்தில் இல்லாதொழிப்பதற்கான முதல் நடவடிக்கையாக தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தால் அதனை நிறுத்திவிட முடியும் எனசொல்லப்பட்டது.

இது தொடர்பில் இழுவை மடி தடை சட்டவரைவை கொண்டுவந்த நாடாளுமன்ற உறுப்பினர்,

ஒரு பிரேரணை கொண்டுவந்திருந்தார். கடலில் அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் விஞ்ஞான பூர்வமாக கடல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இடங்கள் இந்த தொழில் முறைக்கு ஏற்ற இடங்களாக அடையாளப்படுத்தப்படும்பட்சத்தில் கடற்றொழில் அமைச்சர் அந்தந்த பிரதேசங்களில் தொழில் செய்வதற்கு அனுமதி அளிக்க முடியும் என்று ஒரு பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

எனவே இழுவை மடி தடைச் சட்டமானது இந்திய இழுவைமடி தொழிலாளர்களை கட்டுப்படுத்தும் முகமாகவே கொண்டு வரப்பட்டது.

இது உள்ளூர் மீனவர்களுக்குப் பொருந்தாது. உள்ளூர் மீனவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் 'நாரா' நிறுவனத்தினரால் ட்எமது பகுதியில் ஆய்வு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு அறிக்கை கடற்றொழில் நீரியல் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டது. யாழில் இரண்டு இடங்கள் அடையாளமிடப்பட்டு அந்த இடங்களில் மாத்திரம் தொழில் செய்ய அனுமதிக்கப்படும். அடையாளப்படுத்தப்பட்ட இடங்களைத் தவிர்ந்த இடங்களில் தொழில் புரிந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நீரியல் வளத் திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டது இவ்வளவு சம்பவங்கள் இடம்பெற்ற பின்னர்தான் எமது தொழிலை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறோம்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எம்மை சந்தித்தபோது, தன்னுடைய தேர்தல் விடயங்களை கதைத்த பின்னர் அவரிடம், நீங்கள் தானே எமது பிரேரணையை நிறைவேற்றினீர்கள்? அதனை சட்டவரைவாக மாற்றித் தாருங்கள் என்று கோரியிருந்தோம். தேர்தல் முடிந்ததும் அந்த நடவடிக்கையில் இறங்குவேன் என உறுதிமொழி அளித்திருந்தார். சொன்ன வாக்குறுதியை அவர் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். - என்றார். (து-20)

## பருத்தித்துறை...

மீன்பிடியில் ஈடுபட்டனர் என்றகூறி அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு படகில் பயணித்த இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து-26)

### திங்கள் முதல்
# ஆரம்பப்பாடசாலைகள் அனைத்தும் ஆரம்பம்!

கொழும்பு, ஒக். 23

நாட்டில் 200க்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட சகல ஆரம்ப பிரிவுப் பாடசாலைகளையும் எதிர்வரும் 25ஆம் திகதி திறப்பதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

கடுமையான சுகாதார வழிமுறைகளுக்கமையவும் சுகாதார பிரிவினரின் ஒத்துழைப்புடனும் அவற்றை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-இ)

**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் அர்ச்சகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்**

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் ஆலய அர்ச்சகராக தெய்வப்பணி செய்வதற்கு அர்ச்சகர் தேவை. வேதனமும், இதர கொடுப்பனவுகளும் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். அத்துடன் ஆலய சூழலில் குடும்பத்துடன் தங்குவதற்கு வீட்டு வசதியும் உண்டு. சுயவிபரக் கோவையினை அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி : 30.10.2021**
**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**
**பெறுநர் குழு**
**மருதடி விநாயகர் ஆலயம்,**
**மானிப்பாய்.**

**VACANCIES**

முன்னணி கல்வி நிறுவனத்தின் கிளைகளுக்கு யாழ்ப்பாணம், நெல்லியடி சாவகச்சேரி, கிளிநொச்சி, சண்டிலிப்பாய், சுன்னாகம் பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- IT விரிவுரையாளர் - துறைசார் பட்டத்தகுதி
  IT போதனாசிரியர் - HND or ICT NVQ (LEVEL-5) தகமை
- சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்
  G.C.E O/L ஆங்கில திறமைச்சித்தி உடன் நேரடியாக விண்ணப்பிக்கலாம்
  * ஏனையோர் ஊதியத்துடன் 4 மாத பயிற்சியின் பின் இணைத்துக் கொள்ளப்படுவர்)

ஏனைய பதவி வெற்றிடங்கள் - அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்)
# வரவேற்பாளர்
# சந்தைப்படுத்தல் உத்தியோகஸ்தர்
# கிளை முகாமையாளர்

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

DMI COMPUTER EDUCATION No.113, Kannathiddy Road, Jaffna

**31ஆம் நாள் நினைவு அஞ்சலி**

மண்ணில் 24 . 04 . 1984



விண்ணில் 21 . 09 . 2021

**அமரர் இளையதம்பி ஜீவாகரன் (ஜீவா)**

பிறப்பின் பலனை பிறர்க்காகவே வாழ்ந்தவன் நீ- உன்
இறப்பின் பலனை எதைக்கொண்டு மீள்வது நாம்.
சொல்லுக்கும் செயலுக்கும் ஒற்றை வடிவம்
கொடுத்தவன் நீ- இன்று
சொல்லொணா துயர்கொண்டு சிக்கித்தவிக்கிறோம்
உன் பிரிவெண்ணி....

பிரிவு எண்ணி துயருறும்

பலாலி தெற்கு,
பலாலி.

குடும்பத்தினர்.
077 102 4945

# மரண அறிவித்தல்

மண்ணில் 01 . 04 . 1943



விண்ணில் 20 . 10 . 2021

## திருமதி.செல்லம்மா செல்வநாயகம்

**(யாழ்ப்பாணம், சாந்தி ரயர் வேக்ஸ் உரிமையாளர்)**

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ராமையாச் செட்டியார் வீதியை வதிவிடமாகவும் கொண்டு, தற்போது கனடாவில் வசித்துவரும் திருமதி செல்லம்மா செல்வநாயகம் அவர்கள் கடந்த 20.10.2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற சின்னாச்சி, தம்பிமுத்து தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சாந்தி ரயர் வேக்ஸ் உரிமையாளர் செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், தெய்வானை, துரைச்சாமி தம்பதியரின் மருமகளும் ஆவார்.

இவர் கஜேந்திரன், சிவகுமார், சசிகலா (சாந்தி), பாலேந்திரன், விஜேந்திரன், சுவேந்திரன், சசிரேகா, சசிமாலா அவர்களின் அன்புத் தாயாரும் ரிற்ரா, சாந்தினி, விஜயசிங்கம், சாதனா, ராதிகா, சந்திரா, குகன் அவர்களின் அன்பு மாமியாரும் பிந்துஜா, இன்டிகா, ஜென்சிகா, வினோத்குமார், கிரிசாந், சோபி, சஞ்சய், சேயோன், ஹரேக்ஷ், அகிரா, காயநீனா, சர்மிதா, ரிஷி, கவின், மாதேஷ், பிரணேஷ் ஆகியோரின் அன்பு பேத்தியும், உடன்பிறவா சகோதரர்கள் காலம்சென்ற சரசு ஆறுமுகம் கைலாயபிள்ளை, சற்குணநாயகி சகோதரியும், லலிதா, ஜெயபாலன் (மைத்துனர்) ரதி (ஜேர்மன்) நிரஞ்சன் (கனடா) மனோறஜனி, யேகாந்தினி (நல்லூர்) கோணேஸ் (கொக்குவில்) ஆகியோரின் பெரியம்மாவும் குணா (ஜேர்மன்) துஷ்யந்தி (கனடா), திரிசி, ரமேஸ், சுரேஸ் (நல்லூர்) இவர்களின் மாமியாரும் ஆவார். தகனக்கிரியைகள் 24.10.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் நடைபெறும்.

**No.16 முருகேசர் லேன்,**
**நல்லூர்.**

**தகவல்:– ஜெயபாலன் சற்குணம்**
**குடும்பத்தினர்.**
**0779228259**

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை இராமலிங்கம்

**(இளைப்பாறிய இறைவரித்திணைக்கள உத்தியோகத்தர், முன்னாள் முகாமையாளர், டேடன்ஸ் ஆய்வு கூடம், யாழ் கிளை)**

யாழ்ப்பாணம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் 166, 1ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராமலிங்கம் நேற்று (22.10.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும், ஸ்கந்தகுமாரியின் அன்புக் கணவரும், பொன்னையா, செல்லத்துரை, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், அபிராமி (அவுஸ்திரேலியா), சிவராமி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. நவநீதன் (அவுஸ்திரேலியா), ஞானாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அரினி, நயனி, மாதவ், அனாயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**166, 1ம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**
**021 222 3721**

# மரண அறிவித்தல்

## அமரர் சங்கரப்பிள்ளை கமலாட்சி



கைதடி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கமலாட்சி அவர்கள் கடந்த (21.10.2021) அன்று முற்பகல் 10.45 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சேதுகாவலர் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் சின்னப்பிள்ளை, கதிர்காம்பிகை, விஸ்வநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்கினேஸ்வரன், சிறிஸ்கந்தராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சித்திராதேவி, தாரணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மகிந்தினி குயிதன் (கனடா), கபில்ராஜ் வினோதா (லண்டன்), ஜீவன் (லண்டன்), அஸ்மிதா (லண்டன்), டிவ்யா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், ஹரிசனன் (கனடா), ஹரிஸ்னா (கனடா), ஜஸ்வின் (லண்டன்), ஜர்சன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கைதடி கிழக்கு, கைதடி.**
**0777204296**
**மகிந்தினி களஞ்சியம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு

புறோயிலர் சுத்தம் செய்தது 1Kg 650/= அத்துடன் ஊர்ச்சேவல், பேரன்ஸ், கல்பேட், விறாத்துக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

தாசன் பாம்
158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
077 312 7498

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா
077 334 1281

## விற்பனைக்கு

சாப்பாட்டு கடைக்குரிய "கொட்கபேட்" (சாப்பாடு சூடாக்கி 6 அடி நீள 10டிஸ்) மற்றும் கடை பெயர் பலகைகள் (போட்டுகள்)
தொடர்பு : 077 441 0919

## துயர் பகிர்வு

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான
**திருமதி காயத்திரி காந்தன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு. கந்தசாமி சாந்தகுமாரன்**

கடந்த 23.09.2021 அன்று இறைபதம் அடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். கல்வி வலய இசையாசிரியர் கழகம்**

## For Sale

- Rice mill for sale in Kilinochi - 15 perch
- Land with house for sale in Puthukkudiyiruppu- 80 perch
- Land for sale in Urumpirai - 110 perch
- House for sale in Ambalavanar Road - 40 perch
- House with land for sale in Sangaraththai - 70 perch

Contact number: 077 566 0000

## 41 மாணவர்களுக்கு சைக்கிள்கள் கையளிப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.23

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 41 பாடசாலை மாணவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

மக்கள் நல்வாழ்வு மையம் அமைப்பின் ஊடாக உள்ளூர் மற்றும் புலம்பெயர் அமைப்புக்க.ளின் நிதியுதவியில் இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யோகானந்தராஜா கலந்த கொண்டார். வவுனியா, ஐயன்குளம், கோட்டைகட்டியகுளம், ஒலுமடு, குமுழமுனை, செம்மலை மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

(ஐ-72)

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 28 . 03 . 1938

உதிர்வு 21 . 10 . 2021

1980 முதல் ஒல்லுடை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையின் செயலாளராகவும் பின் போஷகராக இன்று வரை அரும்பணியாற்றிவரும் காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையம், ஒல்லுடை அறநெறிப்பாடசாலை, நுண்மதி பாலர் பாடசாலை ஆகியவற்றின் தலைவராக விளங்கிய

**கலாபூஷணம் சைவப்புலவர்**

**அமரர் சுப்பிரமணியம் செல்லத்துரை**

**(ஓய்வுநிலை அதிபர் யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்)**

இன்முகம் காட்டும் புன்சிரிப்பும்
நேர்கொண்ட பார்வையும்
திடம் கொண்ட வாய்மையும் - எம்
செல்லத்துரை ஐயனே! நின் பிரிவு கண்டு
ஒல்லுடை பதியே ஆழத்துயரில் பரிதவிக்க
வைரவர் திருவடி தேடிச் சென்றீரோ

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஒல்லுடை ஞானவைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

**ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்**
**ஒல்லுடை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை**
**காடிவளை இ.இ.ச.சமூக நிலையம்**
**ஒல்லுடை அறநெறி பாடசாலை.**

## துயர்பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு.செல்லத்துரை மாவிரதன்**
அவர்களின் தந்தையார்
**இளவாலை கலாபூஷணம் சைவப்புலவர்**
**சு.செல்லத்துரை**
(ஓய்வுபெற்ற அதிபர், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

ஐயா அவர்கள் நேற்றமுன்தினம் (21.10.2021) வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்

**நிலையில்லா வாழ்விலே நெஞ்சமதில் நீங்கா**
**நினைவுகளை பதித்துவிட்டு பாசம் காட்டிய உறவுகளை**
**பரிதவிக்க வைத்து விட்டு மறைந்தாயே!**

அமரர் சு.செல்லத்துரை ஐயா அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்வி சாரா ஊழியர்கள் நலன்புரிசங்கம்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.**

## கண்ணீர் அஞ்சலி



**கலாபூஷணம் சைவப்புலவர்**

**உயர்திரு சுப்ரமணியம் செல்லத்துரை**

ஆசிரியப் பணியோடு நின்றுவிடாது சைவத்திற்கும் தமிழிற்கும் ஆர்ப்பாட்டமின்றி சுய விளம்பரமின்றி அருந்தொண்டாற்றியவர். ஆன்மீகத்தை இளைஞர்கள் நெஞ்சிலும் விதைத்தவர். அன்னாரின் இழப்பு ஈழத்திற்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ பராசக்தி அம்மனின் பாதாரவிந்தங்களை வேண்டிநிற்கிறோம்.

**மாவை கலட்டி, தெல்லிப்பழை.**

**ஸ்ரீ பராசக்தி அம்மன் தேவஸ்தானம்**

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 12 . 12 . 1963

மறைவு 23 . 09 . 2021

கடந்த (23.09.2021) அன்று சிவபதமடைந்த மட்டுவில் மத்தி சிவன் கோயிலை பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கு புத்தூரை வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி

**அமரர் ஆனந்தன் இராசதேவி**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று முந்தினம் (21.10.2021) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.10.2021) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் துயர் செய்தியை அறிந்து ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**புத்தூர் கிழக்கு, புத்தூர்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**அமரர் முருகேசு குலரத்தினம்**

**தோற்றம் 19.06.1936**

**மறைவு 20.10.2021**

அல்வாய் தெற்கு, கேவோலை பொன் முருகன் இல்லத்தைப் பிறப்பிடமாகவும், கோவில் வீதி, இராஜ உதயத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் முருகேசு குலரத்தினம் அவர்கள் கடந்த (20.10.2021) புதன்கிழமை இரவு காலமாகி விட்டார்.

அன்னார் முருகேசு - பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், மயிலு - சிவக்கொழுந்து தம்பதி களின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற செல்வமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நவரத்தினத்தின் பாசமிகு சகோ தரனும், ப.குகமலர், குகச்சந்திரன், இ.பொன்மதி, த.செல்வமதி, குகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பத்மகாந்தன், பவானி, இராஜேஸ்வரன், தர்மலிங்கம், தஜனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தணீஷன், ஜதீசன், மதீஷன், விஸ்ணுசூர்யா, கஜீபன், விதுர்ஷிகா, லக்சிகா, தர்மிதன், பவானுஜன், குகானுஜன், குகானுஜா ஆகியோரின் பேரன்பு மிக்க பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 21.10.2021 வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் பங்கு வேம்படி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 226 4003
076 365 6508

**தகவல்: குடும்பத்தினர்**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
29 • 03 • 1933



மறைவு
26 • 09 • 2021

## அமரர் சின்னத்தம்பி கனகவேல்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியம் எதிர்வரும் 26.10.2021 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வராம்பற்றை வட கோப்பாயில் அமைந்துள்ள அன்னாரது சம்பந்தியின் வீட்டிலும் சுகாதார விதி முறைகளுக்கு அமைவாக நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தந்தையின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்கள், மரணச் சடங்கில் உறுதுணையாக நின்று செயற்பட்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

தொடர்பு: 077 742 5805
077 602 7056

குடும்பத்தினர்

# 16ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
04.02.1938

மறைவு
08.10.2021

## அமரர் சின்னத்தம்பி சுப்பையா
(ஏகாம்பரம்)
(தவில் வித்துவான்)

கடந்த 08.10.2021 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சின்னத்தம்பி சுப்பையா (ஏகாம்பரம்) அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (23.10.2021) சனிக் கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

குடும்பத்தினர்
076 973 7679

# மரண அறிவித்தல்

## திருமதி பராசக்தி துரைராஜா



யாழ் வேலணை வடக்கைப் (ஆத்திசூடி சோளாவத்தை) பிறப்பிடமாகவும் கனடா பிறம்ரனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி துரைராஜா அவர்கள் ஒக்ரோபர் மாதம் 20ம் திகதி புதன்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் மாணிக்கம் தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற வெற்றிவேலு வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற துரைராஜா (வர்த்தகர் -அல்பிட்டிய) அவர்களின் அன்பு மனைவியும், தவமணி தேவி (கனடா), சரோஜினிதேவி (கனடா), சகுந்தலாதேவி (ஜேர்மனி), கலாதேவி (சுவிஸ்), திருவருள்செல்வம் (ராஜன்-கனடா), அருந்தவச்செல்வன்(செல்வன்-கனடா), ஆகி யோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் பரஞ்சோதி (கனடா), சண்முகலிங்கம் (ஜேர்மனி), மனோகரன் (சுவிஸ்), சதானந்தி (கனடா), தனுஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற நடராஜா மற்றும் சபாநாதன் (கனடா), காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் பரமகுரு (கனடா), விக்கினேஸ்வரன் (மணி-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற வேலாயுதபிள்ளை, மங்கையற்கரசி மற்றும் சுகுணமணி, இராஜலட்சுமி, சாராதா மணி, செல்வராணி, காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, நாகம்மா, வல்லிபுரம் ஆகி யோரின், மைத்துனியும், காலஞ்சென்ற அண்ணாமலை, மரகரதம் ஆகியோரின் சகலியும், இளங்கோ-மதனலதா, பாலகௌரி-தவபாலன், சுரேஸ்-கவிதா, சந்திர குமார்-அஜித்தா, அரங்கேசன்-சண்முகப்பிரியா, ஜனந்தன்-மிராளினி, பிரகலாதன் -துஷாரா, கதா-கோணேஸ்வரன், குமரசோதி-கார்த்தினி, தர்சாயினி, சுதர்சினி-சதீஸ், ஜீவகுமாரி-சியான், சாரா-பிரவீன், ஜீவிந்தன்-மதூரி, தினேஸ்-றெமியா, பிரியந், விதுஷா ,அபிநயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கௌசிதா, லக்சனா, அபிஷா, அஸ்விதா, அவீன், விஷால், சிறீனா, சிறியன், தரங்கிதன், நிகரிகா, சுவர்ணிகா, சுவரன், சிவாத்மிகா, சிவனியா, திவ்யன், லவிஷா, கீத்திஷா, ஆதிரை, வெண்பா, அகரன், அனீஷா, அனுஜன், சரினா மற்றும் சிறியான் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்


அன்னாரின் பூதவுடல் ஒக்ரோபர் மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிமுதல் இரவு 9.00 மணி வரை இலக்கம் 30 BRAMWIN COURT BRAMPTONஇல் அமைந்துள்ள BRAMPTON CREMATORIUM AND VISITATION CENTRE இல் பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் ஒக்ரோபர் மாதம் 25ம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணி முதல் நண்பகல் 11மணி வரை அதே இடத்தில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
மகன் - ராஜன் 905-4599767
மகன் - செல்வன் 647-7415228

# இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

## "சுத்தமான நீர், சுகமான வாழ்வு"





மாபெரும் விலைக் கழிவு

**Rs.29,000/=**

~~Rs.35,000/=~~

TDS <2000PPM

* இலவச நீர் பரிசோதனையுடனும்,
* மிகக் குறைந்த விலையிலும்,
* அதிகபட்ச உத்தரவாதத்துடனும்,
* எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,
* வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்
* 24 மணித்தியாலத்தினுள் முறைப்பாட்டு திருத்திக்கொடுத்தல்



**YARL SMART** *Water solution (Pvt) Ltd.*

341, KKS Road, Jaffna / Karadippoku Junchtion, Jaffna Road, Kilinochchi.

**021 430 0044, 076 666 5267**

yarlsmartwater@gmail.com / www.yarlsmartwater.com

### மக்கள்...

நாடாளுமன்றத்தில் நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் அரச ஊழியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகள் பற்றி நேற்று அரசிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும்போதே இவ்வாறு குற்றஞ்சாட்டிய சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவிக்கையில்,

"அரசிடம் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இல்லை. தோல்வியடைந்த பொருளாதார முகாமைத்துவமே மக்களை இந்தளவுக்கு பிரச்சினையில் தள்ளியுள்ளது. இப்போது எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விலைகளை அதிகரிக்கும் போது, ஓய்வு பெற்றவர்கள், அரச ஊழியர்கள், நாட்டு மக்கள் எவ்வாறு வாழ்வது என்று கேட்கின்றேன்.

இதேவேளை, தற்போது விவசாயிகள் உரம் இல்லாமல் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பெருமையுடன் வாழ்ந்த விவசாயிகள் இன்று வறுமையால் அவதிப்படுகின்றனர்.

இந்தநிலையில், 7 மூளையுடைய அமைச்சர் ஒருவர் அனைத்து பொருள்களினதும் விலைகளை குறைப்பார் என்றும் கடந்த காலங்களில் கூறினர். ஆனால், தற்போது அந்த 7 மூளைக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை. இன்று எமது நாட்டில் வரிசை யுகம் ஒன்று உருவாகி உள்ளது. சீனி வரிசை உள்ளது. அரிசி வரிசை உள்ளது. எரிவாயு வரிசை உள்ளது. பால்மா வரிசை மற்றும் சிமெந்து வரிசை என்று வரிசைகள் உருவாகி வருகின்றன. இதற்காகவா 69 இலட்சம் பேர் மக்கள் ஆணையை வழங்கினர்? இந்த அரசுக்கு வேலை செய்ய முடியாது. விலைகளை அதிகரிக்க மட்டும்தான் முடியும்" என்றார். (த-22)

### நவம்பர்...

அதற்கமைய, சுகாதார சேவைப் பிரிவினர், முப்படை வீரர்கள், பொலிஸ் அதிகாரிகள், சுற்றுலாத் துறை அதிகாரிகள் உள்ளிட்ட முதன்நிலை பணியாளர்களுக்கு இந்த மூன்றாம் கட்டத் தடுப்பூசிகளை முதலில் பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என்று இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (த-இ)

### ஒக்31 ஆம்...

மணிக்கு நீக்கப்படும் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கடந்த மே மாதம் நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டதால், மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை நடைமுறையில் உள்ளது.

ஊரடங்கு உத்தரவு ஒக்ரோபர் முதலாம் திகதி தளர்த்தப்பட்டது. எனினும், மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடு ஒக்ரோபர் 21ஆம் திகதி தளர்த்தப்படும் என்று கூறப்பட்டது. பின்னர் அது ஒக்ரோபர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

### மாகாணங்களுக்கிடையே...

குவரத்து அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். அதற்கமைய, மேல்மாகாணத்துக்கான புகையிரத போக்குவரத்து நடவடிக்கைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. கடும் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி இந்த போக்குவரத்து சேவைகளை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

### குற்றச்செயல்...

கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் பின்நிற்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது. கிளிநொச்சி ஊடக மையமும், சிவில் அமைப்புகளும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த போராட்டம் கிளிநொச்சி தலைமைப் பொலிஸ் நிலையம் முன்பாக பிற்பகல் 3.30 அளவில் நடத்தப்பட்டது. தொடர்ந்து கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் மாவட்ட செயலகம் வரை சென்று ஜனாதிபதி, பிரதமர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர், மாவட்டசெயலர் உள்ளிட்டோருக்கான மனுவையும் கையளித்தனர்.

குறித்த மனுவில், கிளிநொச்சி மாவட்டத்தில் கரிசனை கொண்டு நீண்ட காலமாக சிவில் சமூக அமைப்புகளிலும், கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளிலும் அதற்கு மேலாக ஊடகவியலாளராகவும் பணியாற்றிவரும் திர் இறப்பு விசாரணை அதிகாரியான சிங்கராசா ஜீவநாயகம் மீதான தாக்குதல், கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியிலே இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாள்வெட்டு சம்பவம், கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில், சட்டவிரோத மணலகழ்வு மேற்கொள்பவர்களால் ஒரு வயோதிபர் கடுமையாக தாக்கப்பட்டுள்ளமை, மணல் அகழ்வுகளை தடுக்க செல்லும் கிராம அலுவலர்களும் மண் மாபியாக்களால் கொலை அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை, சட்டவிரோத மது உற்பத்தி போன்ற விடயங்களில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் பொலிஸார் மீதும், சட்டம் ஒழுங்கு தொடர்பிலும் பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். - என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-6)

### தொற்று...

வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் காணப்மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 34 ஆயிரத்து 975 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 276 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 2 ஆயிரத்து 740 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் மேலும் 12 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட இந்தச் உயிரிழப்புகளில் 05 பெண்களும், 07 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 574 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

### விவசாயிகளுக்கு...

மனுக்கள் சமர்ப்பிப்பு மற்றும் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் தினப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'விவசாயிகளுக்கான உரத்தை உடனடியாக வழங்கு' என்று கோரி சபை நடுவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிரணியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சகல கட்சிகளின் உறுப்பினர்களும் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

அரசுக்கு எதிராக எதிரணியினர் எழுப்பிய கோஷங்களால் சபை அதிர்ந்தது. இதன்போது ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதுடன், சபையில் அமைதியின்மையும் நிலவியது. விவசாய உற்பத்தியுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு விவசாயிகள் நாடு முழுவதும் போராட்டம் நடத்திவருகின்றனர்.

இதேபோன்று, ராஜபக்ச அரசு, பொருள்களின் விலையை அதிகரித்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விலைகளைக் குறைக்குமாறு வலியுறுத்தியும் நாடு முழுவதும் பொதுமக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். இந்தநிலையில், நாடாளுமன்றுக்குள்ளும் போராட்டம் வெடித்துள்ளது. (த-22)

### கூட்டத்தில்...

கள் எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு சார் ஆலோசனைக்குழுக் கூட்டம் அமைச்சர் சி.பி ரத்னாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இந்தக்கூட்டத்தில் திட்டமிட்டபடி விடயங்கள் முன்னெடுக்கப்படாமல் வேறு விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டிக்கொண்டிருந்தன. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டியபோதும் அது கவனத்தில் எடுக்கப்படவில்லை.

இந்தநிலையில், சி.சிறீதரன், கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற காணி அபகரிப்பு மற்றும் கிளிநொச்சியில் ஆனைவிழுந்தான், ஜெயபுரம் பகுதிகளின் ஆக்கிரமிப்புகள் தொடர்பில் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோது அரச தரப்பின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாயாதுன்ன சிந்தக அமல், சிறீதரனைப் பார்த்து "புலி.... புலி" எனச் கூச்சலிட்டு அவரின் கருத்துக்கு இடையூறுகளை ஏற்படுத்தினார்.

அதற்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், "நாங்கள் புலிகள் என்றால் எங்களை ஏன் கூட்டத்துக்கு அழைத்தீர்கள். எமது மாகாணத்தின், மாவட்டத்தின், மக்களின் பிரச்சினைகளைப் பேசினால் "புலி" எனக் கத்தும் உங்களிடம் நாம் எவ்வாறு நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?" எனக் கேள்வி எழுப்பிவிட்டு, "இந்தக் கூட்டத்தில் இனி நாம் பங்கேற்கமாட்டோம்" எனக் கூறி வெளிநடப்புச் செய்தனர்.

இதன்போது அரசின் பங்காளிக் கட்சி உறுப்பினர் சந்திம வீரக்கொடி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியதுடன், அவர்கள் தமது மக்கள் தொடர்பில் பேசுவதற்கு உரிமை உண்டு எனச் சுட்டிக்காட்டினர். எனினும், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் கூட்டத்தில் பங்கேற்ற ஏனைய உறுப்பினர்கள் மௌனம் சாதித்தனர். (த-22)

### கல்வித்...

தால் தவறாக வழங்கப்பட்டுள்ளனவா என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை கேள்வி எழுப்பியுள்ளது. இது தொடர்பாக குறித்த சங்கத்தின் வவுனியா கிளையின் தலைவர் பா.நேசராஜா மற்றும் செயலாளர் சி.ரூபன் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், நேற்றையதினம் (நேற்றுமுன்தினம்) இடம்பெற்ற அதிபர் ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டத்தில் வடக்கு மாகாண பாடசாலைகள் மூடியிருந்த நிலைமை தொடர்பாக இன்றைய (நேற்றைய) உதயன் பத்திரிகையில் செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

குறித்த செய்தியில் உள்ள புள்ளிவிவரங்களின் அடிப்படையில் வவுனியா தெற்கு வலயத்தில் திறக்கப்படவேண்டிய பாடசாலைகளில் நாம் அறிந்தவரையில் கிட்டத்தட்ட 15 பாடசாலைகளுக்கு அதிபர்கள் செல்லாதிருந்த நிலையில் அந்த வலயத்தில் 100 வீதம் அதிபர்கள் வருகைதந்திருந்தனர் என்று குறித்த பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்படி செய்தியில் மாகாண கல்வித்திணைக்களம் வழங்கிய தகவலை அடிப்படையயாக கொண்டு குறித்த செய்தி வெளியிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்படியானால் அதிபர், ஆசிரியர்களின் நீதியான போராட்டத்தை மலினப்படுத்தும் விதமாக இவ்வாறு போலியான, தவறான தகவல்கள் மாகாண கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளனவா? என்று நாம் கேள்வி எழுப்புகின்றோம்- என்றுள்ளது. (த-110)

### துப்புரவுப்...

ரென வீழ்ந்து உயிரிழந்துள்ளார். ஆனைக்கோட்டை இரண்டாம் ஒழுங்கையை சேர்ந்த 64 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-125)

### மடு காணி...

பிரச்சினையில் மூக்கை நுழைப்பது ஏன்?" என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பினார். நாடாளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் கூறுகையில்,

"மடு தேவாலயத்துக்கும் அங்குள்ள 27 குடும்பங்களுக்கும் விவசாயக் காணி தொடர்பில் பிணக்குள்ளது. இந்தநிலையில் விவசாயிகளுக்கு தலா 2 ஏக்கர் காணி எனவும், மடு தேவாலயத்துக்கு 5 ஏக்கர் காணி எனவும் பிணக்குக்குத் தற்காலிக தீர்வு காணப்பட்டுள்ளது.

இந்தப் பிணக்கு காணப்பட்டபோது அங்குவந்த பொதுபலசேனாவின் ஞானசார தேரர் தேவையற்ற தலையீடுகளைச் செய்துள்ளார். திருக்கேதீஸ்வரத்தில் பெருமளவில் காணியை ஆக்கிரமித்து பௌத்த கோவிலைக் கட்டிய ஞானசார தேரர் மடு தேவாலய காணிப் பிரச்சினையில் மூக்கை நுழைப்பது ஏன்? இவ்வாறு திருக்கேதீஸ்வரத்தில் பெருமளவில் காணியை ஆக்கிரமித்து பௌத்த கோவிலைக் கட்டிய ஞானசார தேரரிடம் எப்படி நியாயத்தை எதிர்பார்க்க முடியும்? இதேவேளை, விவசாயிகளை வருத்தினால் இந்த நாடு ஒருபோதும் உருப்படாது எனவும் கூற விரும்புகின்றேன்." என்றார். (த-22)

கோப்பாயில் வீடு புகுந்து

# வாள்வெட்டுக்குழு அராஜகம் மூவர் நேற்றுக் கைதாகினர்

காயமடைந்த நபர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஒக். 23

**வாள்கள், கூரிய ஆயுதங்கள் மற்றும் பீங்கான் போத்தல்களுடன் வீடு ஒன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல், வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் மற்றும் வீட்டுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துள்ளது. இந்தச் சம்பவத்தையடுத்து ஓட்டோ சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்**


கோப்பாய் பூதர்மடம் பகுதியில் நேற்றுமுன்தினம் பகல் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது.

இந்தச் சம்பவத்தில் வீட்டு பன்னல்கள், மோட்டார் சைக்கிள், மற்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹை ஏஸ் வாகனத்தின் கண்ணாடி என்பன அடித்துடைத்து சேதம் விளைவிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்தில் கதிர்காமநாதன் குணரட்ணசிங்கம் (வயது - 58) என்பவர் வன்முறைக் கும்பலின் தாக்குதலில் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மூன்றுபேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். புலனாய்வுப் பிரிவினர் ஏனைய 9 பேர் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-25,26)

## மட்டத்தேள் கடித்து சிசு உயிரிழப்பு



கொழும்பு,ஒக்.23

மட்டத்தேள் கடித்ததில் 2 மாதங்களான சிசுவொன்று உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் புத்தளம், அங்குனவில, தேவலஹந்தியப் பகுதியில் நடந்துள்ளது.

2 மாதங்களான பெண் சிசு, தாய் மற்றும் மூத்த சகோதரியுடன் ஒரே படுக்கையில் உறங்கியுள்ளது. காலையில் சிசு அசைவற்று காணப்பட்டதால், சந்தேகமடைந்த பெற்றோர் சிசுவை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு சிசு ஏற்கனவே உயிரிழந்திருந்தமை தெரியவந்தது.

விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சிசுவின் படுக்கைக்கு கீழ், பெரிய மட்டத்தேளைக் கண்டனர். அதனால் சிசு மட்டத்தேள் கடித்ததில் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,4)

## சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.23

திறந்த பல்கலைக்கழக விலங்கியல் துறையால் நடத்தப்படும் வன உயிர் பாதுகாப்பு உயர் சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர் மற்றும் வன உயிர் தொடர்பில் ஆர்வமுள்ளவர்கள் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

க.பொ.த.சாதாரண தரத்தில் கணிதத்திலும், தாய்மொழியிலும் திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது திறந்த பல்கலைக்கழக சான்றிதழ் கற்கைநெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் நவம்பர் 19 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு கற்கைநெறி இணைப்பாளருடன் 011 288 1475 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வாசிப்பு மாதச் செயற்பாடுகள் நூல் நிலையங்களில் இல்லை!

சாவகச்சேரி,ஒக். 23

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வருடாவருடம் பொது நூல் நிலையங்களில் நடத்தப்படும் வாசிப்புமாதச் செயற்பாடுகள் இந்த வருடம் இடம்பெறவில்லை என்று பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சபையால் வருடாவருடம் ஒக்ரோபர் மாதம் தேசிய வாசிப்புமாதமாக பிரகடனப்படுத்தி ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு தொனிப்பொருளுடன் பொது நூலகங்கள் ஊடாக நிகழ்வுகள் நடத்தப்பட்டு வந்தன. கொரோனா தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னர். ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் பொது நூலகங்கள் திறந்து செயற்படுகின்ற போதிலும் வாசிப்பு மாத நிகழ்வுகள் நடத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொது நூலகங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் வாசகர்கள், முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளின் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு வருடாந்தம் தேசிய வாசிப்புமாத நிகழ்வுகள் நடத்தப்பட்டு வந்தன. இந்த வருடம் பாடசாலைகள் திறக்கப்படாத நிலையில் போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை வாசிப்பு மாத நிகழ்வுகளை நடத்த முடியும் என்பதால் அதற்கான அனுமதியை எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்தனர். (ஐ-9)

சாவகச்சேரி நகரப் பகுதியில்

# அதிகரித்துள்ள வாகன நெரிசலை கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை

சாவகச்சேரி,ஒக். 23

சாவகச்சேரி நகரப்பகுதியில் தினமும் அதிகரித்துள்ள வாகன நெரிசலால் விபத்துக்கள் ஏற்படுவதைத்தடுக்க வேகக் கட்டுப்பாட்டுக் குறியீடுகள் பொருத்தப்படல் வேண்டும் என்று சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் சு.நிதிகேசன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் வர்த்தக நிலையங்களுக்கு பொருள்கள் கொண்டு வரும் வாகனங்கள் உட்பட வீதியோரத்தில் நிறுத்தப்படும் வாகனங்கள் ஒன்றுவிட்டு ஒரு தினம் என ஒருபக்கத்தில் நிறுத்தப்பட்டன.

இதனால் வீதி விபத்துக்கள் இடம்பெறுவது மிக குறைவாகவே காணப்பட்டது.தற்போது கனரக வாகனங்கள் , சொகுசு வாகனங்கள், சிறியரக வாகனங்கள் மற்றும் பயணிகள் வாகனங்கள் அதிக அளவில் ஏ9 வீதியில் பய ணிக்கின்றன. இதனால் நகரப் பகுதியில் பெரும் வாகனநெரிசல் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் வீதியின் இருபக்கமும் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன இதனால் வீதி விபத்துக்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. நகரப்பகுதியில் பொலிஸார் கடமையிலிருந்த போதிலும் விபத்துக்களைத் தடுக்க முடியவில்லை.

எனவே விபத்துக்களைக் கட்டுப்படுத்த முன்னரைப் போல ஒன்றுவிட்டு ஒரு தினம் ஒரு பக்கத்தில் வாகனங்களை நிறுத்தும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அத்துடன் வீதி சமிக்ஞை விளக்கு பொருத்தி வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். வேகக்கட்டுப்பாட்டு அறிவித்தல் பலகை சாவகச்சேரி மருத்துவமனை தொடக்கம் நீதிமன்றச் சந்தி வரை பொருத்த வேண்டும் - என்றார். (ஐ-9)

வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையமொன்றிற்கு பொதிசெய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை.
077 419 5015

உடனடி வேலைவாய்ப்பு
வைத்தியசாலை சுத்திகரிப்புப் பணியாளர் ஆண், பெண்
இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.
075 095 4309, 076 255 5529

Classes
தரம் 6 - 11 வரையான மாணவர் களுக்கு கணித விஞ்ஞான பாடங்கள் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.
076 498 9961, 070 192 4898

பௌதிகவியல், இரசாயனவியல் வகுப்புக்கள்
A/L மாணவர்களுக்கான பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல் பாடங்கள் தனிப்பட்ட முறையிலும் சிறு குழுக்களாகவும் கற்பிக்கப்படும்.
077 074 7906, 076 686 7099

வேலையாட்கள் தேவை
முறுகண்டியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு
- மனேஜர்,
- உணவு பரிமாறுபவர்,
- காசாளர்,
- உதவியாட்கள்,
- பொதி செய்பவர்

உடன் தேவை.
தொடர்பு : 076 935 4332

வேலையாட்கள் தேவை
யாழில் பிரபலமான உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ் குறிப்பிடப்படும் பதவிகளிற்கு வேலையாட்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.
1) சமையலாளர் 2) உதவி சமையலாளர்
3) உணவு பரிமாறுபவர் 4) சுத்திகரிப்பாளர்
தொடர்புகளுக்கு: 0777 112 269



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.